
அவரி 2
சஞ்சிகை
வெளியீடு : Srilanka Pen Club

# அவரி 2

# 2022

**சிறீலங்கா பென் கிளப்**

**ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பு**

**இலங்கை**

அவரி,

மகளிர் தின விஷேட சஞ்சிகை

சிறீலங்கா பென் கிளப் வெளியீடு

2022. ஜனவரி – ஏப்ரல்

மஷூறா மஹால்

4/C/5 லேக் வீதி

மருதமுனை – 4

இலங்கை

0765363435

0770696559

0672261044

The Avary

A journal published by

Sri Lanka Pen Club

# ஆசிரியர் குழு :

**நிர்வாக ஆசிரியர்கள் :**

சம்மாந்துறை மஷூறா

மர்ளியா ஸக்காப்

**சஞ்சிகையாசிரியர் :**

என்.எம்.ஆரிபா

**செயற்பாட்டாளர்கள் :**

ஜெஸீமா முஜீப்

றமீனா ஐயூப்

ஷாமென் நிஸாம்டீன்

றமீஸா யாஸீன்

லைலா அக்ஸியா

சிமாயா காதர்

**அட்டை ஓவியம்**

சித்ரா

**கணினி வடிவமைப்பு**

ஆரிபா என்.எம்.

**இதயக் கதவை மெல்லத் திறந்து**

அஸ்ஸலாமு அலைக்கும் "அவரி" மூலம் உங்களை சந்திப்பதையிட்டு புளங்காகிதமடைகின்றேன். Sri lanka pen club ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பானது பெண்கள் மறுமலர்ச்சி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கடந்த வருடம் இலங்கைப் பெண் எழுத்தாளர்களின் மாநாடு ஒன்றினை நடாத்தி "63" முஸ்லிம் பெண்களின் கவிதைகள் அடங்கிய தொகுதியொன்றினையும் வெளியிட்டு வைத்தது.

தமது ஆற்றலை வெளிப்படுத்த வழியறியாமல் ஒதுங்கி இருந்த பெண்களை ஆற்றல் வழிக்கு அழைத்து வந்திருப்பதே எமது அமைப்பில் பெரு வெற்றியாகும். இவ்வருட மகளிர் தினத்தையொட்டிய சிறப்பு மலராக இந்த அவரி சஞ்சிகையை முன்வைக்கிறோம்.

மடை திறந்த வெள்ளம் போல எமது அங்கத்தவர்களின் ஆற்றல்கள் பிரவாகிப்பது கண்டு பல தடவைகள் மெய்சிலிர்த்திருக்கிறேன். மறைந்திருந்த ஆற்றல்களுக்கு வடிகால் அமைத்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி தான்.

ஒடுக்கப்பட்ட குரல்களும் மறுக்கப்பட்ட குரல்களும் களம் கிடைத்தால் எப்போதும் வீறு கொண்டு பாயும். இதைத் தாரக மந்திரமாகக் கொண்டு எமது அமைப்பின் அனைத்து செயற்பாடுகளும் இலங்கும்.

இந்தச் சஞ்சிகை ஆக்கத்திற்கு காரணமாகவிருந்து பூரண ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர் குழு குறிப்பாக கணினி வடிவமைப்பு செய்த ஆசிரியை ஏறாவூர் என்.எம். ஆரிபா, ஆக்கம் அனுப்பியோர் இவற்றையெல்லாம் அங்கீகரித்து அழகு பார்க்கும் எமது அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே!

**அன்புடன்**

**சம்மாந்துறை மஷூறா**

**ஸ்தாபகர்.**

**Sri Lanka pen club**

## வார்த்தைகளால் வாழ்த்துக்கள்

அன்பின் வாசகர்களே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்த முத்துக்களை சேர்த்து வைத்து ஜொலிக்க வைக்க உருவாக்கப்பட்டதே இந்த பென் கிளப். அறிவை வளர்க்கவும், ஆற்றலைப் பெருக்கவும், பாடிக்களிக்கவும், பேசிச் சிரிக்கவும் என்று பல வழிகளிலும் உங்களைத் தன்னுள் ஈர்த்து பல நிகழ்ச்சிகளின் இயங்குதளமாக பென் கிளப்பின் வாட்ஸ்அப் குழுமம் இயங்கி வருகிறது.

இங்கே இலக்கியம் வளர்க்கலாம்: புத்தகங்கள் வாசிக்கலாம்: சிங்களம்/ ஆங்கிலம் என்று மொழி வளத்தை விருத்தி செய்து கொள்ளலாம்: தொழில்நுட்ப அறிவை பரிமாறிக்கொள்ளலாம், சமையல் கலையைக் கற்கலாம்: மார்க்க அறிவை வளர்த்துக்கொள்ளலாம்: கைப்பணி வேலைகளை செய்து பழகலாம்: எங்கள் சிறுவர்களின் ஆக்கங்களை பகிரலாம்: பாடலாம்: கலாய்க்கலாம்: பெருங்கடலில் சிறுதுளிகள் இவை.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நெறியாளர்கள் தேனீக்கள் போல சுறுசுறுப்பாக இயங்கி மற்றவர்ளையும் இயங்க வைக்கிறார்கள். பென் கிளப் உறுப்பினர்களின் சிறந்த கவிதைகள் இங்கே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படுகின்றன. சொந்த ஆக்கங்களும் படித்ததில் பிடித்ததும் இங்கே பகிரப்பட்டு பலராலும் பாராட்டப் படுகின்றன. இது குழுமம் அல்ல எங்கள் குடும்பம்.

இதோ உங்கள் கைகளில் தவழும் இந்த ”அவரி”மகளிர் தின சிறப்பு இதழாக வந்து இருக்கிறது. அவரியை அலங்கரிக்க ஆக்கங்கள் அனுப்பிய அனைத்து சகோதரிகளுக்கும் நன்றி சர்வதேச உறவுகளை இணைத்துக் கொண்டு தொடர்ந்தும் பயணிப்போம் பென் கிளப் இன்னும் வளர வாழ்த்துக்கள்.

**கலாநிதி: மரீனா இல்யாஸ் ஷாபீ**

**நியூசிலாந்து**

# உள்ளே உள்ளவை


| இல | கவிதை | கவிஞர் | பக்கம் |
|---|---|---|---|
| 01 | பெண்மை | பர்ஹத் றியா (NMஆரிபா) | 01 |
| 02 | பெண் | றமீனா ஐயூப் | 02 |
| 03 | அவள் | யாழ் றமீஸா யாசீன் | 03 |
| 04 | உன்னால் முடியும் | மும்தாஜ் பேகம் ஹமீட் | 04 |
| 05 | ஆண் வாசம் | Dr.ராஜியா முயீஸ் | 05 |
| 06 | பாசத்தை வென்ற பேராசை | எம்.சி.மஹ்மூதா ஏ ரஹ்மான் | 06-08 |
| 07 | அவள் எனும் அழகி | செல்வி.றுஸ்தா சிறாஜுடீன் | 09 |
| 08 | அன்புள்ள மனைவிக்கு | தம்பாளை ஜுவைரியா | 10 |
| 09 | கொஞ்சம் நில் | எஸ்.யூ.கமர்ஜான்பீபீ(JP) | 11 |
| 10 | முளைக்கும் பேனாக்கள் | Dr.ஜலீலா முஸம்மில் | 12-14 |
| 11 | மாற்றங்கள் கண்ட மாதர்கள் | அறூபா அஹ்லா | 15 |
| 12 | இளவரசியே | பர்சானா றியாஸ் | 16 |
| 13 | முன் வா பெண்ணே | அஸ்ஹா லாபீர் | 17 |
| 14 | உன்னால் முடியும் பெண்ணே | ராஜிலா றிஜ்வான் | 18 |
| 15 | போற்றும் பெண்மை | ஹுமதா ஏ ஹப்பார் | 19 |
| 16 | பெண் எனும் பிறவி | ரிம்ஸா டீன் | 20 |
| 17 | கடந்துவிடு கண்ணே | றுஸ்தா | 21 |
| 18 | நீயின்றி நிறைவில்லை | பஸ்மினா அன்ஸார் | 22 |
| 19 | பொன் கூடுகள் சிதைகையில் | எஸ்.ஃ.பாயிஸா அலி | 23-24 |
| 20 | கடமைகளைச் செய்வோம்,<br>உரிமைகளை வெல்வோம் | பர்ஹானா அப்துல்லாஹ் | 25 |
| 21 | வீறு கொண்டு எழுந்திடு | ஷர்ஜிலா பர்வீன் யாக்கூப் | 26 |
| 22 | துணிந்தெழு பெண்ணே | சிமாயா காதர் | 27 |
| 23 | காலாவதியற்ற இலட்சியம் | ஷப்ரா இல்முத்தீன் | 28 |
| 24 | புலம்பல் | எம்.எஸ்.றஸ்மியா | 29 |
| 25 | விடியல் தேடும் விட்டில்கள் | றிப்ஹா அன்சார் | 30 |
| 26 | பெண்மையின் பெருமிதம் | ஜெய்னுலாப்தீன் றிஸ்வானா | 31 |
| 27 | இருள் விலகட்டும் | மஷுறா | 32 |
| 28 | உள்ளக்கதவை மெல்லத்திறந்து | பர்சானா எம்.பி | 33-34 |

| | | | |
|---|---|---|---|
| 29 | பெண்களும் சம உரிமையும் | இஸ்மாலிகா ராஜா | 35 |
| 30 | குடும்பப் பெண் | நஜீபா ஹம்தான் | 36 |
| 31 | எந்த மை கொண்டு எழுதப்பட்டிருக்கின்றாய் நீ | கலாநிதி: மரீனா இல்யாஸ் ஷாபி | 37 |
| 32 | பல தடைகளைத் தாண்டிய இவள் சாதனை | பஹ்ரியா பாயிஸ் | 38 |
| 33 | வெற்றி பெறுவோம் | லறீபா பதுர்தீன் | 39 |
| 34 | தடை தாண்டல் | பாத்திமா ஸுபா | 40 |
| 35 | சாதாரணமான அவளின் அசாதாரணங்கள் | லைலா அக்ஸியா | 41-42 |
| 36 | பென் கிளப் அங்கத்தவரான பிறகு | ஷாமென் நிஸாம்டீன் | 43 |
| 37 | பெண்ணென்றும் சிறந்தவள் | எம்.ஏ. மாஹிறா | 44 |
| 38 | லிமரைக்கூக் கவிதைகள் | நஸீரா எஸ் ஆப்தீன் | 45 |
| 39 | தாய்மையில் மேன்மை | வஸீலா ஸாஹிர் | 46 |
| 40 | அடுத்தது நானாக வேண்டும் | றஷீதா ஏ நாபித் | 47 |
| 41 | விடுதலை | ஹஸனியா இர்பான் | 48-49 |
| 42 | புதியவள் | ரஜூலா பேகம் உவைஸ் | 50 |
| 43 | Pen Club தந்த களம் | AB.ஜெஸீமா முஜீப் | 51 |
| 44 | பெண்மை போற்றுவோம் | திருமதி சுஹைதா ஏ கரீம் | 52 |
| 45 | இதய ஊற்றிலிருந்து | திருமதி. மர்ளியா சக்காப் | 53 |
| 46 | பெண்ணின் ஊனம் எங்கே | பர்ஸானா எம்.பி. | 54-55 |
| 47 | பெண் கல்வி | Dr.ஜலீலா முஸம்மில் | 56 |

## பெண்மை

இறைவன் படைப்பில் உன்னதமாய்
தாங்கிக் கொள்வதில் பூமியாய்
ஆற்றுப்படுத்துகையில் அன்னையாய்
சமயத்தில் நல் ஆசானாய்
திகழும் மகோன்னதம் பெண்மை..

தோள் சாய்ந்து கொள்ள தோழியாய்
அரவணைப்பதில் சகோதரியாய்
அன்பில் திளைக்க மனைவியாய்
கணவனுக்கு வாய்த்த வரமாய்
திகழும் மகோன்னதம் பெண்மை

பல்வேறுபட்ட அவதாரங்களாய்
உருமாறி தன்னை மாற்றி
உலகில் உலவும் ஒப்பற்ற காவியமாய்
ஓராயிரம் உறவுகளை
உலகிற்கு வழங்கும் மலரானவள் பெண்மை

ஆளாக்கி அழகு பார்ப்பாள்
ஆராதித்து தோள் கொடுப்பாள்
துன்பம் கண்டால் துவண்டிடுவாள்
இன்பம் கொண்டால் இனித்திடுவாள்
என போற்றப்படும் பெண்மை ஒரு பொக்கிசம்.

**பர்ஹத் றியா ( NM.ஆரிபா)**
**ஏறாவூர்.**

## பெண்

ஒரு துளி உதிரத்தைக் கூட
உருவமாக்கிடுவாள் இவள்

ஒரு மார்பில் தாய்ப்பால்
மறுமார்பில் காமத்துப் பால்
இரண்டுக்குமிடையில்
அவளது இதயம் அவளுக்காக
துடித்ததே இல்லை

அரவணைப்பதில் தாயாய்
அனுசரிப்பதில் மகளாய்
மகிழ்விப்பதில் மனைவியாய்
கஷ்டத்தில் கை கொடுக்க
சகோதரியாய் தோள் கொடுக்க
நல்ல தோழியாயென
எத்தனை அழகிய பரிமாணங்களாய் உருவெடுக்கும்
உன்னதமானவள் இவள்

அகண்ட அண்டத்திலும் திரண்ட
பூமிப்பந்திலும் பெண்ணாய்ப் பிறந்து
எத்தனை எத்தனை துன்பங்கள்
அத்தனையும் புரிந்து கொண்டு
பொறுமையோடு புன்னகித்து
கடந்து சென்றிடுவாள் இவள்

அருவியின் வீழ்ச்சி தான் நதிகளின் எழுச்சி
சாதம் வடிக்கவும் சாதனைகள் படைக்கவும்
சரித்திரமாய் வந்தவளே பெண் எனும்
பெருமை பெற்ற பொன்னோவியமாவாள்
இப்பாரினிலே பெண்ணாய்
நானும் பிறந்ததிற்கு
பெருமிதம் கொள்கின்றேன்.

**றமீனா ஐயூப்**

**எருக்கலம்பிட்டி**

## அவள்

அவள் இரக்கத்தின் இன்னொரு வடிவம்
ஆயுள் முழுவதும் இல்லத்தின் புனிதம்
தாயாய் தாரமாய் மகளாய் பரிணமிப்பாள்
தரணியில் நிழலாய் நிலைத்து நிறைவாள்

தன் வாழ்வினை பிறருக்கு அர்ப்பணிப்பாள்
அள்ள அள்ள குறையாத அட்சயப்பாத்திரம்
அறிவில் அனுபவத்தில் தாய்மையை பிரதிபலிப்பாள்
அகிலத்தின் ஆனந்தம் அவள் காலடியில்

நாளும் தொழுது நல்லது செய்வாள்
கணவனின் கருத்தைக் கடைப் பிடிப்பாள்
அன்னையானால் அன்னமிட்டு அன்பைப் பொழிவாள்
அறுசுவை உணவு படைத்து ஆரோக்கியம் பேணுவாள்

உறவுகளை தன் பாசத்தால் பதியமிடுவாள்
பெண்மை பேணி பேரின்பம் தருவாள்
குழந்தையைப் பெற்றிட பெருவலி பொறுப்பாள்
ஆணவத்தை அடக்கி அன்பால் ஆள்வாள்

ஆசைகள் துறந்து குடும்பத்தைக் காப்பாள்
துன்பத்தை இன்பமாக்கும் கலைகளின் வித்தைக்காரி
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
அவளின் சீதனம் காரிருளில் மின்னும் வெண்ணிலவு அவள்

**யாழ் றமீஸா யாசீன்**

## உன்னால் முடியும்

நீயில்லாத தொழிலொன்று இன்றில்லையடி பெண்ணே
ஆணுக்குப் பெண் சளைத்தவள் இல்லையென
மண்ணிலும் விண்ணிலும் கொடிகட்டிப் பறக்கிறாய்

அன்றைய பேசா மடந்தைகள் தான்
இன்றைய நாடாழும் பெண்களை செதுக்கி செப்பனிட்டவர்கள்
ஆணின் உயர்வுக்குப்பின் பெண் அன்றிருந்தாள்
பெண்ணின் உயர்வுக்குப்பின் ஆண் இன்றிருப்பதால்
அச்சமின்றி அவள் செயலாற்றுகிறாள்

பாரினிலே பெண்கள் பல தொழிலும் செய்து
கை கொடுத்துக் காக்கின்றனர் குடும்பத்தை
ஆணுக்குப் பெண் இன்று நிகராய்த் திகழ்வதால்
ஆண்களே போற்றும் பெண்களாய் இருக்கின்றோம்

அன்றைய பழமொழி இன்றைய நிகழ்மொழி
உன்னால் முடியாதது எதுவும் இல்லையென
உலகறிய சாதித்து வரும் பெண்ணே
உலகம் உனக்கானது வாழ்ந்திட
வாழ்வும் உனக்கானது வாழ்ந்து களி

**மும்தாஜ் பேகம் ஹமீட்**
**ஒலுவில்**

## ஆண்வாசம்

வீரிட்டு அழுத என் பிள்ளையின் குரல்
தொண்டை வரை வந்த தாய்மையை
விழுங்கிக் கொண்டு நான் குழந்தைக்காக
காத்திருப்பதும் களிப்பதும் ஒரு தாயாக
இந்த நொடி மட்டுமே தான்

அள்ளி அணைக்க கைகள் துடிக்க
எப்போது அணைப்பேன் ஸ்பரிசச் சூட்டில்
நான் கண்ட ஆனந்தம் எல்லையற்றது
ஊர் போற்ற உறவு கொண்டாட

ஆண் வாசம் உன் தந்தையுடன் முடிந்திருக்க
உன் பிறப்பு தொடர்ந்தது அவ்வாசத்தை
எனக்குள் நீ உதிக்காவிட்டாலும் என்றும்
ஆண்பிள்ளை வளர்ப்பை உலகுக்குச் சொன்னேன்
உன் மூலமாய் நான் பெறாத என் மகனே!

**Dr.ராஜியா முபீஸ்**
**கிண்ணியா**

## பாசத்தை வென்ற பேராசை

அன்று விடுமுறை தினமாகையால் நதீறா தன் நண்பி பஸ்மியைச் சந்திப்பதற்காக தாயிடம் அனுமதி கேட்டு அவள் வீட்டிற்குச் சென்றாள்.பஸ்மிக்கும் அவளைக் கண்டதும் அளவில்லாத மகிழ்ச்சி.

" வாடி நதீறா நீ வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்குடி. நான் கூட உன்னை மீட் பண்ணணும் என்று தான் நெனச்சேன்…அல்லாஹ் பார்த்து உன்னையே அனுப்பி வச்சிட்டான் பாத்தியா? என்றாள். ஆமாண்டி எல்லாத்துலயும் ஏதோ ஒரு நலவிருக்கும்" என்றாள் நதீறா…

இப்படி பல மணி நேரம் பஸ்மி, நதீறா இருவரும் கதைத்திருந்து விட்டு பஸ்மியின் அறையின் சுவர்களை ஒரு தரம் நோட்டமிட்டாள் நதீறா.சுவரெல்லாம் நல்ல வேலைப்பாடுகள் செய்து அழகாக அலங்கரித்திருந்தாள்.ஆனாலும் இடையிடையே சில வித்தியாசமான கிறுக்கல்கள் காணக்கிடைத்தன.

ஆனாலும் அவற்றைக் காட்டிக் கொள்ளாமல் " பிறகு படிப்பெல்லாம் எப்படிப் போகுது? எக்ஸாம் எழுத ரெடியா?" என்று கதை கொடுத்துக் கொண்டே அவளது பயிற்சிக் கொப்பிகளைப் புரட்டினாள்.அதன் பின் புறங்களிலும் பல கிறுக்கல்கள் எழுதப்பட்டிருந்தன.சற்று அதிர்ச்சியாக இருந்தாலும் அவளிற்குள் ஏதோ வேதனையொன்று தேங்கிக் கிடக்கின்றது என்பதை மட்டும் புரிந்து கொண்டாள்.

மதிய நேரம் நெருங்கியதால் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானாள் நதீறா. ஆனால் பஸ்மியோ விட்டபாடில்லை…" இன்டக்கி எங்க வீட்லயே லஞ்ச் எடுத்துட்டுப் போகலாம் நில்லுடி.. ஒன்னோட கதச்சதுல இருந்து எம்மனசு எவ்வளவு ஆறுதலா இருக்கு தெரியுமா?" என்றாள். பஸ்மியின் தாயாரும் வற்புறுத்தினார். அதனால் அவளும் தாயிடம் கோல் எடுத்துச் சொல்லி விட்டு அங்கு நிற்பதற்கு சம்மதித்தாள்.

பஸ்மியின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை….அப்படி இருக்கும் போது நதீறா மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள். " ஆமா சுவரு, கொப்பியிலெல்லாம் என்னவோ கிறுக்கி வச்சிருக்க?" என்றாள். " அது..அது வந்து…" என்று இழுத்தாள் பஸ்மி. " உன்ட பெ(b)ஸ்ட் பிரண்ட் எங்கிட்ட சொல்லாம வேற யாருக்கிட்டத்தான் சொல்லப்போற பயமில்லாம சொல்லுடி நான் யாருக்கிட்டயும் சொல்ல மாட்டன் உம்மனசுக்கும் ஆறுதலாயிருக்கும்" என்றாள் நதீறா. நதீறாவை அண்ணார்ந்து பார்த்த பஸ்மியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. அவளது கைகளைப் பற்றி கண்களைத் துடைத்து ஆறுதல்படுத்தினாள் நதீறா. அறைக்கதவையும் லேசாகச் சாத்தியும் விட்டாள். அப்போது தான் பஸ்மிக்கு சிறு தைரியம் வந்தது போன்று மெதுவாகப் பேசத்தொடங்கினாள்.

"நீங்கெல்லாம் எப்பிடி சுதந்திரமாக இருக்கீங்க ஆனா எனக்கு அப்பிடி இல்லடி…எந்த நேரமும் படி படி என்று எங்க உம்மா நச்சரிச்சிக்கிட்டே இருப்பா அது மட்டுமில்ல ஓய்வில்லாம எல்லாக் க்ளாசுக்கும் போகணும்…ஸ்கூல்ல நடக்குற எல்லாப் போட்டிகளிலயும் நான் பங்கு பற்றணும் அது எல்லாத்துலயும் பெஸ்ட் ரேங்கும் வரணும் என்று என்னப்போட்டு படாதபாடு படுத்துறா என் நிலம அவக்கு விளங்குதேயில்ல நான் என்ன மெஷினா..? மனிஷன் தானே கொஞ்சம் கூட ரெஸ்ட் எடுக்க விடுறதேயில்ல மதர்ஸா போகணும் அங்கயிருந்து வந்தா க்ளாஸ் போகணும் லீவு நாட்கள்ல கூட குடும்பங்கள்ற வீடுகள்ல நடக்குற விஷேசங்களுக்கு கூட என்னக் கூட்டிப் போகாம எக்ஸாம் வருது இருந்து படி என்டு சொல்லிட்டு வாப்பாவும், உம்மாவும் மட்டும் போவாங்க அப்பவெல்லாம் எம்மனசு படாதபாடு படும். அந்த டைம்ல எழுதியவை தான் இந்தக் கிறுக்கல்கள்" என்று பஸ்மி தனது மனப்பாரத்தை நதீறாவிடம் இறக்கி வைத்தாள். "எதிர்காலத்துல இக்கிறுக்கல்கள வெச்சி ஒரு கவிதப் புத்தகம் வெளியிடலாம்டி" என்றாள் நதீறா.

“ஆமாண்டி நானும் அப்படித் தான் நினச்சிருக்கன்” என்று பஸ்மி கூற “பஸ்மி ஒங்க தாத்தா மெடிக்கல் கொலேஜ் தானே? ஆமாடி நாநாவும் வெளிநாட்டுல அதனால் தான் எனக்கு ஆறுதல் சொல்றதுக்கு யாருமில்லடி தாத்தா டொக்டருக்குப் படிக்கிறதால நானும் டொக்டர் ஆகணும் என்டு தான் உம்மாட பிடி ஆறுதலுக்கு உம்மம்மா, பெரியம்மா என்டு போனா அங்கயும் படிப்பப்பத்தித் தான் கத எனக்கு கொஞ்சமாவது ஆறுதல் வார்த்த இல்லடி எனக்கு படிப்பே வெறுத்துப் போகுதுடி மொத்தத்துல வாழ்க்கயே வெறுத்துப் போச்சு என்ன தான் காசு பணம் இருந்தும் நான் நிம்மதி இல்லாம புழுவாத் துடிச்சிக்கிட்டிருக்கன்” என்று மூச்சு விடாம கூறி முடித்தாள்.

“ உண்ட வாப்பா உன்னோட பாசம் தானே” என்று கேட்டாள் நதீறா “ அன்பு தான்” என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தாள் பஸ்மி “ ஏன்டி சிரிக்கிற”? அவரும் உம்மாட கதயக் கேட்டுக்கிட்டு நான் ஸ்கொலஷிப் எக்ஸாம்ல 190 மாக்ஸாவது எடுத்திருக்கணுமாம் என்டு ஒரு வருசமா என்னோட பேசாம இருந்தாரு….”அப்படியா..”? என்று ஆச்சரியமாகக் கேட்டாள் நதீறா.. “ ஆமாண்டி உனக்கு என்னத்துல குற உடுப்புக்கு உடுப்பு, விரும்பின சாப்பாடு ஸ்கூல், க்ளாஸுக்குப் போக ஆட்டோ.. இப்படியெல்லாம் செலவு செய்யக்குள்ள உனக்கு படிக்க ஏலாதா? நம்ம வீட்ல வேல செய்ற சல்மாட பிள்ள 197 எடுத்திருக்கு நீ ஆக 170 மாக்ஸ் தானே எடுத்திருக்காய் என்டு என்ன அடிக்காத குற நான் என்னடி செய்ய முடிஞ்சத தானே செய்வன் அல்லாஹ்ட நாட்டத்தில் நம்பிக்கயில்லாம இருக்காங்களே என் உம்மா, வாப்பா” “ என்றாள் பஸ்மி. “ கவலப்படாதடி பஸ்மி ஒன்ன அல்லாஹ் கை விட மாட்டான், ஒனக்கு ஆறுதலா நானிருக்கன் உன்னால முடிஞ்சத செய் நீ வாழ்க்கையில ஜெயிப்ப” என்று நதீறா கூறினாள். “ தேங்ஸ்டி “ என்று பஸ்மி கூற… பஸ்மி நான் உம்மாக்கிட்ட இதப் பத்திக் கொஞ்சம் கதைக்கட்டுமா? என்க… “ வேணாம்டி அவங்களுக்கு அதெல்லாம் பிடிக்காது நீயெல்லாம் கதச்சா கௌரவக் குறச்சலா நினப்பாங்க… பிரச்சின இன்னும் கூடும் வேணாம்டி” என்று பஸ்மி பதறி விட்டாள்.

பஸ்மியிடம் விடை பெற்றுச் சென்ற நதீறாவுக்கு இரவெல்லாம் தூக்கமேயில்லை அவளின் நினைவாகவே இருந்தது. பாவம் பஸ்மி எவ்வளவு காசி பணமிருந்தும் வேதனயோட வாழ்றாளே…. அந்த வகையில பார்த்தா எங்க உம்மா வாப்பா கிடைக்க கொடுத்து வைத்திருக்கணும்” என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள். பஸ்மி கெட்டிக்காரி அவள் தானாகவே படிப்பாள் ஆனா மன ஆறுதலுக்கு நா அடிக்கடி கோல் எடுத்துக் கதச்சா என்ன?... அவள்ட உம்மா என்ன சொல்லுவாளோ..? என எண்ணியவளாய் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தாள்.

தன் நண்பியை அவள் உம்மாவின் பிடியிலிருந்து விடுவித்து அவள் சுதந்திரமாகப் படிக்க வேணும் வாழ வேணும் என்று தீர்மானித்தாள். தனது மாமா முறையான டொக்டர் சிபானிடம் எல்லாவற்றையும் முறையிட்டாள். அவர் தான் பஸ்மியின் குடும்ப வைத்தியர் என்பதும் அவளுக்குத் தெரியும். அடுத்தபடியாக ஈவினிங் க்ளாஸ் முடிந்ததும் பஸ்மியிடம் ஒரு ஐடியாக் கொடுத்தாள். “ பஸ்மி ஒங்க உம்மாட அட்டகாசத்துல இருந்து தப்ப ஒரு வழி சொல்லித் தாறன் நல்லாக் கேட்டுக்கோ நீ படிச்சிகிட்டு இருக்கக்க உம்மா தல சுத்துது என்று உம்மாக்கிட்ட எழும்பிப் போகக்க விழுற மாதிரி லேசா விழு அப்ப ஒங்க உம்மா பறந்தடிச்சிக்கிட்டு டொக்டர் சிபானுக்கிட்ட கூட்டிக்கிப் போவா… அதுக்கப்புறம் நடக்குறத பிறகு இருந்து பாரேன் “ என்றாள் நதீறா அவள் சொன்னதும் சரியாகத் தான் பட்டது பஸ்மிக்கு

இரண்டு நாட்கள் கழித்து நதீறா சொன்ன மாதிரி செயற்பட்டாள் பஸ்மி. அவளின் உம்மா சும்றா பதறியடித்துக் கொண்டு கணவனுக்கு கோல் பண்ணி விடயத்தைச் சொல்லி விட்டு டொக்டர் சிபானிடமே அழைத்துச் சென்றாள். பஸ்மி மயக்கமாகவே இருந்தாள். “ என்ன டொக்டர் பிள்ளக்கி என்னாச்சு?” என்று பதறிக் கொண்டே இருந்தாள். அதற்குள் பஸ்மியின் வாப்பாவும் வந்து விட்டார். “ எல்லாமே செஞ்சி பார்த்தாச்சி பெரிசா ஒன்னும் இருக்கிறதா தெரியல்ல எதற்கும் வோட்ல ஒரு 2,3 நாள் வெச்சி தலைல அடிபட்டதால

ஸ்கேன் எடுத்துப் பார்த்தா நல்லமெண்டு நினைக்கன் “ என்டு வோட்டிற்கு அனுப்பி விட்டார். வோட்டில் இருக்கும் போது பார்க்க வரும் யாருடனும் பேசாமலே இருந்து விட்டாள்.உம்மா, வாப்பா வந்து ஏதாவது கேட்டால் மௌனமாகவே இருப்பாள்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் மட்டுமே வந்தது. நதீறா வந்த போதும் அவ்வாறே நடந்து கொண்டாள் அவளின் குடும்பத்தார் மிகவும் பயந்து விட்டார்கள்.” என்ன டொக்டர் எங்க புள்ள ஒன்டுமே பேசுதில்ல தொடர்ந்து இப்படியே இருந்துடுவாளா என்டு பயமா இருக்கு நாங்க வேற எங்காவது கொண்டு போகவா டொக்டர்..? “ என்று கெஞ்சி நின்றார்கள். “ நாங்க எல்லா டெஸ்டும் செஞ்சி பார்த்துட்டம். அவக்கு எந்தப் பிரச்சினையும் இல்ல மன அழுத்தம் தான் காரணமெண்டு நாங்க தீர்மானிச்சிருக்கம் அவவுக்கு எவ்வளவு ரெஸ்ட் கொடுக்க ஏலுமோ குடுங்க படிப்பப் பத்தி ஏதும் கதைக்காதிங்க அவ விரும்பின நேரம் விரும்பின மாதிரி படிக்கட்டும் நாள் போகப் போக சரியாகிடும். நீங்களும் அல்லாஹ்விடம் கேளுங்க இல்லன்னா கௌன்சலர் ஒருத்தரிடம் தான் காட்டணும் “ என்றார்.

இதைக் கேட்டதும் சற்று பயந்து விட்டாள் சும்றா கௌன்சல்ட்ட போனா பிள்ள நாம படிக்கச் சொல்லி கஷ்டப்படுத்துறதா சொன்னா நம்மள எல்லாரும் முட்டாளாக்கிடுவாங்க நாம சத்தமில்லாம வீட்டுக்கு கூட்டிட்டு போய் ரெஸ்ட் குடுப்பம் என்று தீர்மானித்தார்கள். “ யா அல்லாஹ் என்ட புள்ள படிக்காட்டியும் பரவால்ல பழைய மாதிரி சிரிச்சி , கதச்சி கலகலப்பா இருக்கணும்.” என்று அல்லாஹ்வை வேண்டிக் கொண்டார்கள் பஸ்மியைப் பார்க்க நதீறா தினமும் வருவாள். டொக்டர் சிபான் நதீறாவிடம் விடயத்தைச் சொன்னார். “ பஸ்மிய வீட்டுக்கு போய் இரண்டொரு வாரம் கழித்து மெல்ல மெல்ல பேசச் சொல்லு”

என்றார் பஸ்மியிடம் விசயத்தைச் சொல்லி விட்டு இருவரும் “ நாம போட்ட திட்டம் பலிச்சிடுச்சி” என்று அல்லாஹ்வை புகழ்ந்து கொண்டார்கள். இப்போது தான் பஸ்மியின் பெற்றோர் நல்லதொரு பாடம் படித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல இது போன்ற பெற்றோர் பலருக்கும் நல்லதொரு பாடம் இது.

**எம்.சி.மஹ்மூதா ஏ ரஹ்மான்**

**ஒலுவில்.**

## அவள் எனும் அழகி......

வான் முழுதும் நிறைந்து மின்னும்
அழகிய நட்சத்திரங்களைப் போல
உலகெங்கும் பரவிக் கிடக்கிறாள்
அவள் எனும் அழகி....

மேகம் பிளந்து தூறிடும் மணிமணியான
மழைத் தூறல் போல் அன்பினை
அள்ளிப் பொழிவதில் அத்தனை
ஆனந்தம் அவளுக்கு...

சூட்டினைச் சுமந்திடினும் ஒளியேற்றும்
சூரியனின் பொற்கதிர் போல் தன்
பொன்னான சிரிப்பினால் உலகை
சிறைப் பிடித்து வைப்பதிலென்னவோ
அத்தனை திறமை அவளிற்கு...

அவள் எனும் வார்த்தையில்
அத்தனை அழகினையும் அத்தனை
அழகிற்கும் அத்தனை அர்த்தங்களையும்
சுமக்குமிந்தப் பெண்மையின் குலமோங்கி
அருள் ததும்ப இறையருளிய வரம் தானோ....?

**செல்வி. றுஸ்தா சிறாஜுடீன்**
**நற்பிட்டிமுனை**

**அன்புள்ள மனைவிக்கு!**

நீ என் ஆணி வேர் பெண்ணென்றால்
பெரும் சாபமென அர்த்தமில்லை
பெண்ணுக்கு கண்ணீர் மட்டும் சொந்தமில்லை
என் வீட்டில் நீ சமையல் மட்டும் செய்வதில்லை

சந்தோஷங்களையும் செய்கின்றாய்
எனக்கும் தந்து நீயும் சாப்பிடுறாய்
வீட்டை மட்டுமல்ல என்னையும் சுத்தமாக்குகிறாய்
உடன் பாடுகளைப் பாராட்டுகிறாய்

முரண்பாடுகளை கடிந்து கொள்கிறாய்
நீயின்றி தொடங்காது நீயின்றி முடியாது
நீயின்றி நிறையாது நீயிருந்தால் குறையேது
இப்படிக்கு கணவன் உன்னில் மறுபாதி

**தம்பாளை ஜுவைரியா**

## கொஞ்சம் நில்

பெண்ணுக்கு உயர்வென்றடங்கியிருக்கு
பேனா முனையோடு தானிருக்கு
நித்தம் அறிதலின் ஆவலுடன்
உலா வருமதனால்....

அனுபவங்களும் காலத்தால் தேடலில் கையசைக்கும்
சிந்தனையால் சீராக்கு உன் வாழ்வை
சிதறிப்போகாமல் பற்றுடன் தனதாக்கு...
உற்றார் உறவினர் ஊராரோடு

புற்றுக்குள் பாம்பொன்று இருப்பது போல்
புறத்தினிலும் நஞ்சோடு நகைத்திடுவர்
பத்திரமாய் இத்தரையில் நடந்திடுவீர்
பகுத்தறிவைக் கொண்டு ஜெயித்திடுவீர்

ஆணினத்தை அடக்கவென்று அடம்பிடிக்காதே
அகம்பாவத்துடன் நீயிருப்பதை தெரிந்து கொள்
பின்னுமொரு நாள் பிழையும் தானறியும்
பார்வை இருண்ட பின்னேது காட்சிகள்

பதவிகள் தேடி நிதம் பறந்திடாதே..
பாவையே உன்னழகு அதுவல்ல
வீட்டோடு தேசத்தையும் நேசித்திடு
வீணே நாசமது வராது காத்து நிற்கும்..

**எஸ்.யூ. கமர்ஜான்பீபீ (JP)**
**ஹுனுப்பிட்டிய வத்தளை**

## முளைக்கும் பேனாக்கள்...

இங்கே பேனாக்கள் முளைக்கின்றன...
பேனாவே
விதையாக...
விரும்பி
விதைக்க....
நந்தவனமாக மலர்ந்து
பெருங்காடாக விரிந்து
நறுமண மலர்களை
அறுவடை செய்து
லட்சம் விதைகளை
அந்தப் பூக்களும்
உருவாக்க..
இங்கே பேனாக்கள் முளைக்கின்றன...

விரல்களில்
சொட்டுகின்ற துளிகளால்
உலகத்தின் கறை அழிக்க களங்கம் துடைக்க
காத்திருக்கின்ற எழுத்துக்கள் இவை...
மனதில் ஊன்றி
மூளையில் ஒன்றி
புதுப்புனல் என
விரல்களில் பூப்பூக்கும்
பேனாக்களில்
முளைக் கொண்டு
ரோஜாக்கள் உருவாகும்
இவை வாடாமல்
உலகம் உள்ளவரை
உயிர்வாழும்..
இந்த நந்தவனத்தில்
பேனாக்கள் முளைக்கின்றன...
தமிழுக்காக உழைக்கின்றன...

ஸ்ரீலங்கா பென் கிளப் அமைப்பின் சிறப்பை எடுத்தியம்பக் கிடைத்தமையிட்டு முதற்கண் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.தலைவிக்கும் மகிழ்வுடன் நேசங்களைச் சமர்ப்பிக்கிறேன்.அதிலே அங்கத்துவம் வகிப்பதை இட்டு பெருமையும் பேருவகையும் அடைகிறேன். ஸ்ரீலங்கா பென் கிளப் அமைப்பைப் பற்றியும் அதன் வெற்றிகரமான முன்னெடுப்புகளைப் பற்றியும் சொல்லத் தேவையில்லை.அதன் புகழ் அனைவரும் அறிந்ததே . கட்டுக்கோப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நேர்த்தியாக இயங்கிக் கொண்டிருக்கும், புகழாரம் சூடிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா பென் கிளப் தளமானது முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்குக் கிடைத்த அளப்பரிய வரம் என்றே சொல்லலாம்.

ஒரு கலைஞன் என்றாவது ஒருநாள் தனது படைப்பு மேடையேறும் என்ற ஆசையிலேயே பயணிக்கிறான். அவனது ஆசை அரங்கேறுகின்ற வேளை,அது தரும் உந்துதலில் இன்னும் இன்னும் ஏராளமான படைப்புகள் அவன் உள்ளத்திலிருந்து மலர்கின்றன.நிறைய எழுத்தாளர்களுக்குக் களத்தை ஏற்படுத்தி அவர்களின் அடித்தளத்தைப் பலப்படுத்தியிருக்கிறது இந்த அமைப்பு. மட்டுமல்லாமல் அனேகர்களுக்கு ஆறுதல் தரும் மருந்தாகவும்பயன் தரும் மரமாகவும் ஸ்ரீலங்கா பென் கிளப் தளம் இயங்குகின்றது.

அண்மையில் நடைபெற்ற பெண்கள் மாநாடும், சுட்டுவிரல் கவிதைத் தொகுப்பு வெளியீடும் கூட இந்த அமைப்பின் மகத்தான வெற்றி என்றே கூறலாம். அத்தோடு இதன் அங்கத்தவர்களோ ஆளுக்காள் சளைத்தவர்கள் அல்லர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. விட்டுக் கொடுத்தலோடும் அர்ப்பணிப்போடும் அளப்பரிய பங்களிப்பினை நாளாந்தம் வழங்கிய வண்ணம் இருக்கின்றார்கள்.ஒரு ஆறுதலான மரநிழலில் அமர்வது போன்றும் ஒரு சகோதரியின் வீட்டிற்கு அளவளாவச் செல்வது போன்றும் அத்துணை இன்பங்களை அள்ளி வழங்குகிறது இந்தத் தளம்.

நாளாந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் கட்டமைக்கப்பட்டு குறிப்பிட்ட அங்கத்தவர்களால் திறமையாக அவர்களின் ஒருங்கிணைந்த பங்களிப்பில் நேர்த்தியாக நடைபெறுகிறது.பயனுள்ளதாகவும் அமைகிறது.கவிதை நிகழ்ச்சிகள், மருத்துவம், போட்டிகள்,சிறுவர் நிகழ்ச்சிகள், பாடல்,மத சம்பந்தமான நிகழ்வுகள் என்று பல்சுவை மிக்கதாக ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு நாளும் இடம் பெறுவது சிறீலங்கா பென் கிளப் அமைப்பின் திறன் வெளிப்பாடே.

அமைப்பின் அங்கத்தவர்களைப் பற்றிச் சொல்லப்போனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் கைதேர்ந்தவர்களாக பட்டம் பெற்றவர்களாக இருப்பதைக் காணலாம். மருத்துவர்கள்,ஆசிரியர்கள், அதிபர்கள், தாதியர்கள், இன்னும் இன்னோரன்ன பணிபுரிகின்ற பெண்களே இந்த அமைப்பில் அங்கத்துவம் வகிக்கிறார்கள். வெற்றிபெற்ற மாதர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரே அணியில் நின்று எழுத்தாணி பிடித்திருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய முயற்சி.. உன்னதமான பணி.. தமிழை வளர்க்கும் ஒருமித்த பேனா முனைகள்..இவர்கள் யாவரையும் ஒரு கூட்டுக்குள் கொண்டு வந்த தலைவியின் முயற்சியைப் பாராட்டியேயாக வேண்டும்.

தமிழிலே அதிக பற்றுக்கொண்டிருந்தும் மருத்துவர் என்ற ரீதியில் அதை வெளிப்படுத்தத் தெரியாமல், வெளிப்படுத்த நேரமில்லாமல் திணறிக் கொண்டிருந்த வேளை ஒரு வடிகாலாக,என் எண்ணக் கருக்களை அரங்கேற்ற ஒரு மேடையாக ஸ்ரீலங்கா பென் கிளப் தளம் எனக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கிடைத்தது. சிறுகல் ஒன்று விழுந்து தளும்பிய குளமாக மாறினேன். என் பிரவாகங்கள் நாலாபக்கமும்அலைகளாகக் கரை கடந்தன. கவித் துளிகளை வாரியிறைத்தன. அங்கத்தவர்கள் அனைவரினதும் வார்த்தைகளால் ,நிகழ்ச்சிகளால் கவரப்பட்டு மனதைப் பறிகொடுத்தேன்.உள்ளக் கிடக்கைகளை அள்ளித் தெளித்தேன்.தேன் துளிகளாக இனிக்கும் நிறைய நட்புகளைப் பெற்றேன்.

சிறீலங்கா பென் கிளப் அமைப்பானது எதிர்காலத்தில் இன்னும் நிறைய வெற்றிகள் பெற்று நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் உலகம் முழுவதும் புகழ் மணம் பரப்ப வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க... வளர்க...

"தமிழ் என்று தோள் தட்டி ஆடு - நல்ல

தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு"

- பாவேந்தர்

நன்றியுடன்....

**Dr ஜலீலா முஸம்மில்**

**ஏறாவூர்.**

**மாற்றங்கள் கண்ட மாதர்கள்**

கருவினிலே கலைத்திட்ட
காலம் மாறிடிச்சி
அறிவினை பெற்றிடும்
காலமும் வந்தாச்சு

அடுப்பறைக்குள்ளே அகப்பையை
பிடித்த கரங்களோ
அலுவக அறைக்குள்ளே
எழுதுகோலை பிடிக்கின்றன
ஆனந்தமே பார்க்கும் போதோ பேரானந்தமே

பட்டங்கள் பெற்று பதவிகளிலும் உயர்ந்தாச்சு
சுதந்திரங்கள் பெற்று சந்தோஷமும் அடைந்தாச்சு
மாற்றங்கள் வந்ததனால் ஏற்றங்கள் கண்டாச்சு
தூற்றிய நாக்களும் போற்றுதே இன்று

மண்ணிலும் ஆண்டாச்சு
விண்ணிலும் பறந்தாச்சு
கால் தடங்களை அத்தனையிலும்
ஊன்றியே பதிச்சாச்சு

பெண்ணாலும் முடியும்
பெருமைகள் சேர்த்திட
பெண்மையைக் கொண்டாடுவோமே
உறுதுணையாய் நிற்போமே

**அறூபா அஹ்லா**
**கல்முனை**

## இளவரசியே

அன்றுகளில் உயிரோடு புதைக்கப்பட்டவள் நீ
இன்றுகளில் மகளிர் தினம் கொண்டாடுகிறாய்
அன்றுகளில் சொத்துரிமை மறுக்கப்பட்டவள் நீ
இன்று வாணிபம் செய்கிறாய்..

அன்று பாதுகாப்பிற்கே உத்தரவாதமற்றிருந்தவள்
இன்று சட்டங்களால் பாதுகாக்கப்படுகிறாய்
மரண சாசனம் எழுதுகிறாய்
ஒப்பந்தங்கள் செய்கிறாய்
சுயமாய் முடிவுகள் எடுக்கிறாய்

காட்சிப் பொருளாக இருந்த காலங்களைக் கடந்து
இன்று சமூகத்தின் ஆணி வேரானாய்
ஆணின் வேரும் ஆனாய்
ஆனால் இறுதியாக ஒன்று…

உரிமைகளை எமக்களித்து உள்ளம்
பூரித்த ஆடவர்களின் உரிமையில் நீ
கை வைக்காதிருக்கும் வரை சலுகைகளை வழங்கி
சந்தோஷப்படும் தலைவனின் எல்லைக்குள் நீ
அத்து மீறாதிருக்கும் வரை…..

மகளிர் தினத்தை எமக்களித்த ஆடவர்கள்
ஆண்கள் தினம் ஒன்றிற்கான
தேவையற்றிருக்கும் வரை
நீ என்றும் இளவரசி தான்

**இறக்காமம் பர்சானா றியாஸ்**

## முன் வா பெண்ணே

உலகத்தார் அறிவர் உன் அருமை
உயர்வாய் பாடிடுவர் உன் பெருமை
உள்ளத்தில் உனக்கு வேண்டியது பொறுமை
பள்ளத்தில் எறிந்திடு கீழ்த்தரமான சிறுமை

சாதனை படைத்திட வா நீயும்
சாமர்த்தியமாய் நீ முயன்றிடு நாளும்
அவனியிலே உனக்கான ஒரு தினம்
அதில் போற்றிடணும் பெண்மையெனும் குணம்

அறிவாலே அறியச் செய்திடு வலிமையை
அன்பாலே அகிலத்தாருக்கு காட்டிடு எளிமையை
பண்பாலே நீயும் பரிவை பிறப்பித்திடு
பூவுலகத்தாரை உன் மதியாலே சிறப்பித்திடு

நாளும் பேசப்பட வேண்டியவள் நீ
பெருமை தலை மேலேறினால் தீ
பணிவுடன் நீயும் சரித்திரம் படைத்திடு
துணிவுடன் தடைகளை தகர்த்து எறிந்திடு

**அஸ்ஹா லாபிர்**
**மக்கொன**

## உன்னால் முடியும் பெண்ணே.....!!!

சீரிய வாழ்வும் தெளிந்த நல்லறிவும்
கூரிய பார்வையும் செழித்த ஞானமும்
தேறிய முதிர்ச்சியும் தெவிட்டாப் பயிற்சியும்
சாத்தியமாக்குமடி சரித்திரம் உன்னைப் போற்றுமடி

வேண்டிய வையாவும் விரும்பி யுனையடைந்திட
தோண்டிய குழி விலக்கி வீறுகொண்டே நீ நடந்திட
தாண்டியே சென்றிடு சாதனைகள் படைத்திடு
மாண்டிடும் வரையிலும் மன்றாடி முயன்றிடு

மடமைகள் போக்கி மண்மீது உயர்ந்திட
கடமைகள் யாவையும் கண்ணியமாய்ச் செய்திட
துரும்பென எளிதில் இரும்பையும் வளைத்திட
விரும்பியே செய்திடு விரைந்து நீ அடைந்திட

போதனைகள் ஏற்று புவிதனைப் போற்று
சாதனைகள் படைத்திட சாத்தானைத் தூற்று
மாதரென இகழ்ந்திடும் மாந்தர் யாவரையும்
மடையரென நினைந்து மனதினைத் தேற்று

தட்டுத்தடுமாறி தடைகள் பல மீறி
முட்டி மோதி விடு முகத்தினில் உமிழ்ந்து விடு
தொட்டுப் பார்த்திட துடித்திடும் ஆடவன்
விட்டு ஓடும்படி எட்டிநீ உதைத்திடு

இன்னும் ஆயிரம் வெற்றிகள் உனக்குண்டு
மின்னும் வைரமாய் ஜொலித்திடும் வழியுமுண்டு
எண்ணத்தில் நீயே உயர்ந்தவள் கண்ணே
அத்தனையும் உன்னால் முடியும் பெண்ணே

**ராஜிலா ரிஜ்வான், கம்பம்**
**தமிழ்நாடு, இந்தியா**

## போற்றும் பெண்மை

அகிலம் படைத்தவனின் அற்புதப் படைப்பு பெண்
படித்தாலும் படிக்காவிட்டாலும் அரசி ஸ்தானம்
அன்பு மகன்களின் தேசத்தில்

இன்னலில் பிணியாகையில் இன்ப ஆறுதல் மகளாயவள்
சண்டைபல போட்டாலும் சடுதிக்கும்
விட்டுக் கொடுக்காத பெரு மனசுச் சகோதரியவள்
சங்கடங்களில் சயனிக்கையில் சாந்தமாய்த் தலைதடவும்
பந்தமான தோழியவள்

கட்டியவனைக் கண்ணாக காலம் முழுதும்
பார்க்கும் அடர் வர்ண இரவின்
ஒரு கீற்று ஒளியாய் மனைவியவள்
தினம் கொண்டாடுவோம் அவர்களை

**ஹுமதா ஏ ஹப்பார்**
**மாவனல்ல உயன்வத்த**

## பெண் எனும் பிறவி

பெண்மையே உலகில் புதுமை மென்மையே
இவள் கொண்ட மேன்மை
தாய்மையே இவளின் தூய்மை
கருணை காட்டுவதில் நிகரில்லை இவளுக்கு

உறவே உலகமென ஓயாது உழைத்திடுவாள்
மகளாகி வீட்டில் மகிழ்ச்சி வளர்ப்பாள்
சகோதரியாகி சமத்துவம் பேணுவாள்
நண்பியாக நட்பில் நல்லுபதேசம் தருவாள்

மனைவியாகி காலமெல்லாம் கடமை காத்திடுவாள்
மகன் பெற்று இறுதி வரை மார்போடு சுமந்திடுவாள்
மருமகனுக்கும் தாயாகி சேவை செய்திடுவாள்
பேரன் கண்டால் பேரன்பு வளர்ப்பாள்

சொந்த பந்தமே தன் சொர்க்கமென்று எண்ணுவாள்
எல்லோரும் கூடி வாழ கோடி முறை பிரார்த்திப்பாள்

**ரிம்ஸா டீன்**
**ஹுனுப்பிட்டிய**

## கடந்து விடு கண்ணே

கயவனின் வெறியால் கசக்கப்பட்ட நீ
கண்ணீர் சிந்தி வெதும்பி நின்று
தத்தித் ததும்பி தலை குனிந்து
தளர்ந்திடாமல் துணிந்தெழு அம்பாய் மறுகணமே

அண்ட சராசரமும் உனக்காய் இருக்க
அச்சம் ஏன் உனக்கு இனியும்
வேங்கையாய் கர்ஜித்து வீறுகொண்டு எழு
வினைகள் விலகும் விதியே அமையும்

சோதனைகள் கண்டு துவண்டிடாதே நீ
சுக்கு நூறாய் போய் விடாதே நீ
இறைவனிடம் உன்னைக் கொடுத்து விடு
இமைப்பதற்குள் அவன் தீர்த்து வைப்பான்.

மாய உலகின் மர்ம விம்பம்
மனதைத் தினம் விறைப்பாய் காய மூட்டும்
இழி செயல் நிறைந்து சமூகமிது
இடமும் வலமும் இடர்கள் வரும்

**காத்தான்குடி றுஸ்தா**

## நீயின்றி நிறைவில்லை

பெண்ணே உன் பெருமை
உன் பிறப்பிலேயே துவங்குகின்றது
உன் கோபங்கள் கொண்டாடப்படுகிறது
உன் உணர்வுகள் உணரப்படுகிறது

உன் பிடிவாதம் ரசிக்கப்படுகிறது
உன் ஆளுமைகள் அரங்கேற்றப்படுகிறது
நீயில்லா நிறைவுமில்லை நீயில்லா மகிழ்வுமில்லை
என உன்னோடு மட்டுமன்றி
உன் பெயருக்குப் பின்னாலும் கவசமாய் வரும்
அப்பாவுக்கு மகளாய் பிறந்ததால்.....

பெண்ணே உன் பெருமை
உன் பிறப்பிலேயே துவங்குகின்றது

**பஸ்மினா அன்ஸார்**
**உக்குவளை**

## பொன் கூடுகள் சிதைகையில்

இடைவேளைக்கு முதல் எனக்கு ஃப்ரீ பாடம் ஒரு நாளும் அமைவதில்லை. அன்றைக்கு தமிழ்ப்பாட ஆசிரியை தனதும், எனதுமான பாட வேளைகளை இணைத்து கணிப்பீடு ஒன்றை நடத்தியிருந்தார். குறித்த அப்பாட வேளையில் எனக்குக் கிடைத்த அவகாசத்தில் எட்டாம் வகுப்பு பிள்ளைகளின் செயலட்டைகளை திருத்துவோம் என்று உட்கார்ந்த போது தான் இரண்டாம் வகுப்பிற்குப் பொறுப்பான ஆசிரியர் என்னிடம் வந்து தான் அவசரமாக வைத்தியசாலை செல்ல வேண்டி இருப்பதாகவும் முடிந்தால் தனது வகுப்பில் வந்து உட்கார்ந்து செயலட்டைகளைத் திருத்துமாறும் கேட்டுக் கொண்டார். நானும் சரியென்று தலையை ஆட்டியவாறு இரண்டாம் வகுப்பு வகுப்பறைக்குள் போய் உட்கார்ந்தேன்.

அப்போது அந்த வகுப்புக்கு ஒரு தாயார் கைக்குழந்தையுடன் வந்திருந்தார். மகனிடம் பேசிக் கொண்டிருந்தவர் என் பக்கம் திரும்பி “ பாருங்களேன் ரீச்சர் …இவன்ட தலை முடி கிடக்குற கிடையை நேரத்துக்கு வெட்டாம இப்படி பாபா மாதிரி வளர்த்து நாசமாக்கி வச்சிக்கிடக்கு.’’ என்று குறை சொல்லத் தொடங்கி விட்டார். நாம தான் “ பிள்ளைக்கி முடி வெட்டி விடலியா ..? “ என்று கேட்க வேண்டும். இங்க மாறி நடக்கிறதே என்று நினைத்த படி …… “ இதென்னமா …. புதுக்கதை …. இதெல்லாம் நீங்க வீட்ட இருந்தில்லையா ஒழுங்கா பார்த்து வெட்டி அனுப்பணும்….. இதென்னடாண்டா அதுகள்ட பாட வேளையில இங்க வந்து பிள்ளைய கொஞ்சிக் கொண்டு இருக்கிங்க..’’ என்று நான் கொஞ்சம் இறுக்கமாகவே பேசவும்…. பாவம் அந்த இளம் தாய் உடனே அழுது விட்டார்.

நான் பதறிப்போனேன்…. “ ச்சே ….என்ன தேவைக்கு இப்ப இப்படி வன்மையான சொற்களை பாவித்தேன்.மனசு வெட்கத்தாலும் குற்றவுணர்வு கொண்டும் கூனிக்குறுக… உடனடியாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். அந்தப் பெண் இன்னமும் உடைந்து அழத் தொடங்கி விட்டார். தலையைக் கோதி விடும் தாயின் கையைப் பிடித்துக் கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருக்கின்றான் சிறுவன். அந்தப் பெண்ணோ அவனின் தந்தையை தனக்குத் தெரிந்த தூஷண வார்த்தைகள் அத்தனையையும் சொல்லிச் சொல்லி திட்டுகிறார். பின்னர் அழுகிறார். மகனோ என்னை ஒரு தரம் திரும்பிப் பார்த்து விட்டு தன் குட்டித் தங்கையை கொஞ்சத் தொடங்குகிறான்.

இவர்கள் தங்கள் கோபங்களை எதற்காகப் பிள்ளைகளிடம் கொட்டி ஆறுதல் தேட முனைகிறார்கள் என்று புரியவில்லை. இந்தப் பெண் தனக்குக் கிடைக்கும் சந்தரப்பத்தில் எந்தளவு தன் முதல் கணவரை பிழையாக சித்தரிக்க முனைகிறாரோ, அதேயளவு அல்லது அதை விடவும் அதிகமாக அந்தத் தந்தை மகனிடம் சில வேளை இந்தப் பெண்ணைப் பற்றிக் குறை கூறக் கூடும். இந்தப் பிஞ்சின் ஆழ் மனதில் அது புதைந்து……. புதைந்து ஒரு காலத்தில் எந்தவிதமான உளவியல் சிக்கல்களை இவன் எதிர் கொள்ள நேரிடுமோ புரியவில்லை. சில வேளை திருமண வாழ்க்கையை ஒரு சாபக்கேடு என்று நினைத்து ஒதுங்கிப் போகவும் கூடும். பாவம் இவனும்….. இவன் போன்ற அப்பாவிப் பிஞ்சுகளும்

சரி …. இன்டைக்கும் இந்தச் செயலட்டைக் கட்டுகளை முடிக்க முடியாது என்று மட்டும் தெளிவாக விளங்கியது. எல்லாவற்றையும் மூடி வைத்து விட்டு “ என்னம்மா பிரச்சினை.’’ என்றேன்….அவர் மகனுக்கென்று கொண்டு வந்த சிறிய உணவுப் பொதியை கொடுத்து விட்டு என்னோடு பேசத் தொடங்கினார்.

எங்கட பாடசாலைச் சுற்றுச் சூழலில் தான் அவரது வீடும் …சுனாமி வீட்டுத் திட்டத்தில் கிடைத்த சிறிய வீடு உம்மா தொடர்ந்து வெளிநாடு. உம்மம்மாவிடம் வளர்ந்து பக்கத்து வீட்டு கடற்றொழில் செய்யும் இளைஞரை இருபதுக்குள் விரும்பி திருமணமும் செய்து நல்லாப் போய்க் கொண்டிருந்த வேளை அவரின் கணவர் புல்மோட்டைப் பகுதிக்கு வலை கட்டிக் கொண்டு தொழிலுக்குப் புறப்பட்டிருக்கிறார். கொஞ்ச நாள் ஃபோன் தொடர்பும் காசு அனுப்புவதாய் இருந்தாலும் பிறகு அவைகள் கொஞ்சங் கொஞ்சமாய் குறைந்து போயிருக்கிறது. சில மாதம் கழித்துத் தான் அங்கேயும் கணவர் இன்னொரு பெண்ணோடு குடும்பம் நடத்தும் கதை இவருக்கு விளங்க வந்திருக்கிறது.

பலமான குடும்பப்பின்னனணி, பாதுகாப்பு எதுவுமின்றி கணவரோடு போராட முடியாமல் கொஞ்ச நாள் அலைக்கழிந்து இருக்கிறார். அந்தப் பெண்ணின் உறவினர் அவருக்கும் குழந்தைக்கும் ஒரு பாதுகாவல் வேணும் என்ற அவசியம் உணர்ந்து மறுமணம் செய்து வைத்திருக்கின்றனர். அந்தப் பெண்ணை பிறகு முடித்தவர் பெரியளவான பிரச்சினைகள் எதுவுமில்லை என்றாலும் மகனுக்குரிய செலவுச் சல்லி கொடுக்காமல் இழுத்தபடி இருந்த, முதல் கணவர் பிள்ளையை இவரிடமிருந்து பறித்துக் கொண்டு போய் வயசான அவரின் தாயாரிடம் வளர்க்க் கொடுத்திருக்கிறார்.

இப்ப இந்தப் பெண் பாடசாலைக்கு வந்து தான் தன் மகனைப் பார்க்க முடிகிறது. இத்தனைக்கும் மகனுக்கு ஏழு அல்லது எட்டு வயது தான் இருக்கும். உம்மா ஒரு பக்கம் வாப்பா ஒரு பக்கம் பிள்ளையை சரியாகப் பராமரிக்க முடியாத ஒரு முதிய பெண்ணிடம் பிள்ளை வளர வேண்டிய நிர்ப்பந்தம் ஒழுங்கான உடைகள் இல்லை சரியான போசாக்கான உணவு இல்லை நல்ல பழக்க வழக்கம் பண்பாடுகள் வீட்டில் சொல்லித்தர வழியில்லை. ஏமாற்றமும் விரக்தியும் அரவணைப்பற்ற ஏக்கமுமாய் ஒரு குழந்தை இந்த சமூகம் பார்த்திருக்க வளர்கிறது. நாளை…சில வேளை படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டு இந்தக் கரையோரமாக வலையிழுக்க மீன்கள் பொறுக்க என்று வெளிக்கிடலாம். அங்கு பெரிய நாநா, மாமாமாருக்கு வீடி, சிகரெட் வேறு ஏதும் முடிச்சுக்கள் வாங்கிக் கொடுத்து சில்லறை காணலாம். பிறகு அவனும் அதற்கு மெல்ல மெல்லப் பழக்கப்படலாம்.

கொரோனா காலமென்ற எந்த முன்னெச்சரிக்கையும் இன்றி வாகனம் வாகனமாய் கரையோரம் வந்து இறங்கும் ஊர் பேர் தெரியாத கனவான்கள் மூலம் இவ்வாறான பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு பிள்ளை உள்ளாகலாம். பலகாலம் கழித்து அவனும் பிஞ்சிலே பழுத்த ஒருவனாய் சிறுவயது திருமணம் குழந்தை குட்டியென்று குடும்பஸ்தன் ஆகலாம். ஒழுங்கான தெரிவில்லாமை அந்தத்துணை கொஞ்ச நாளில் அலுத்துப் போக மறுபடியும் தனக்கேற்ற இன்னொரு துணையை நாடலாம். எனக்குத் தலை சுற்றியது. இறைவனே இது என்ன சோதனை….? இப்படிப் பிள்ளைகளை தம்பதியாக சேர்ந்திருந்து வளர்க்க வேண்டிய காலத்தில் இவர்களின் ஆழ்மனதில் எதற்காக வீண் சலனங்களை ஏற்படுத்துகிறாய்.? எதற்காக மறுபடியும் அடுத்த துணை…. அடுத்த துணை என்று அலைய விடுகிறாய்….?

கஷ்டங்கள் யாருக்கு இல்லை கவலைகள் யாருக்கு இல்லை சண்டை சச்சரவுகள் மனமுறிவுகள் எங்கு தானில்லை அதற்குத் தீர்வு உடனே குடும்பத்தை உடைத்துப் போடுவதா…? உடைந்து தனித்தனியாக பிரிந்து போகுமுன்னர் ஒருகணம் ஒரேயொரு கணம் இந்த உலகத்தில் எல்லா உரிமைகளோடும் இயல்பான ஒரு வாழ்கை வாழும் ஆசையோடு நம் வழியாக இந்தப் பூவுலகிற்கு வந்த ஜீவன் ஒன்று அனாதரவாய் அலையப் போகிறதே…. என்று ஒரு கணம் கூட உங்களுக்கு உள்ளுணர்வு உறுத்தவில்லையா,..?

எனக்கு தனியாய் உட்கார்ந்து அழ வேணும் போலிருக்கிறது.

**எஸ். ∴பாயிஸா அலி**

## கடமைகளைச் செய்வோம் உரிமைகளை வெல்வோம்

“ தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் இருக்கின்றது” எனும் நபிமொழி பெண்களுக்கு மாபெரும் அந்தஸ்த்தை இஸ்லாம் வழங்கியிருக்கின்றது என்பதற்கு சான்றாகும்.

பெண் பிள்ளைகளை நல்லொழுக்கத்துடன் வளர்க்கும் பெற்றோருக்கு சுவர்க்கம் கிடைக்கும் எனும் நபி வாக்கு பெண் பிள்ளைகளை சுமையாக நினைக்காமல் சுகமாக நினைத்து சிறப்பாக வளர்க்கத் தூண்டுகின்றது.

அல்குர்ஆனில் பின்வருமாறு

கூறுகிறான் ” அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் உங்களை அவர்களுக்கு ஆடையாகவும் ஆக்கினோம்”. கணவனும் மனைவியும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்வதை புலப்படுத்திட இதனை விடச் சிறந்த உதாரணம் வேறு இருக்க முடியுமா? அத்தோடு ”உங்களின் உள்ளங்கள் அமைதி அடைவதற்காக பெண்களை படைத்தோம்” என்று அல்லாஹ் கூறுகிறான். இஸ்லாம் பெண்களுக்கு வகுத்துள்ள மார்க்க நெறிகள் யாவும் பல பிரச்சினைகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் பெண்களை பாதுகாக்கும் கேடயங்கள் என்பதுணர்வோம்.

ஒரு மகளாக, சகோதரியாக, மனைவியாக மற்றும் தாயாக பெண்கள் தமது கடமைகளைக் கச்சிதமாக சரிவரச் செய்வதோடு இஸ்லாத்தின் போதனைகளை ஏற்று அற நெறிப்படி வாழ்வார்களேயானால் குடும்பங்களில் எந்த பிரச்சனைகளும் ஏற்படாது என்பது திண்ணம்.

பெண் விடுதலை கோஷங்கள் எல்லாம் ஏட்டுச் சுரைக்காய் போலத்தான் அவை எந்த நலன்களையும் பெற்றுத் தருவதில்லை. ஆனால் அல்குர்ஆனின் நிழலில் தனது கடமைகளைச் சரிவர ஆற்றி வரும் பெண்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகள் தாராளமாக கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பெண்கள் தமது கடமைகளை சீராக மேற் கொள்வதன் ஊடாக அழகிய கட்டுக்கோப்பான குடும்பங்கள் கட்டியெழுப்பப்படும் என்பதை உணர்வோம். பெண்கள் தம் குடும்ப நிருவாகத்திற்காக எந்தப் பல்கலைக்கழகங்களிலும் பட்டங்கள் பெற்றதில்லை. பக்குவ பட்ட பெண்ணின் உள்ளம் போன்றதொரு பல்கலைக்கழகமுமில்லை

**மக்கொனையூராள்**

**பர்ஹானா அப்துல்லாஹ்**

## வீறு கொண்டு எழுந்திடு

வீறு கொண்டு எழுந்திடு பெண்ணே
வாகை சூடிட வீறு கொண்டு எழு
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக
பார்போற்ற வீறுகொண்டு எழு

உன் சீரிய இலக்கினை அடைய
வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாக எழு
நேர்கொண்ட பார்வையுடன் எதற்கும்
அஞ்சாத நெருப்பு பாவையாக இரு

முறத்தால் புலியை துரத்திய
எங்கள் சங்கப் பெண்ணாக எழு
ஆணுக்கு நிகராக கல்வியில்
சிறந்த சிங்கப்பெண்ணாக எழு

வீர வாள் கொண்டு போரிட்டு நாடு
காத்த வேலுநாச்சியாராக
வீரத்துடன் எழு

சங்க காலத்திலேயே தமிழன்னைக்கு ஆத்திசூடி
சூடிய ஔவையாராக புலமையுடன் எழு

உலக சாத்திரங்கள் தெளிவாக படித்து
சரித்திரங்கள் பல வென்றிட
ஞான நல்லறம் வேங்கையாக எழு

ஞான நல்லறம் கொண்டு வீரமங்கையீராகி
பெண்ணே வீறு கொண்டு எழுந்திடு

**ஷர்ஜிலா பர்வீன் யாகூப். கம்பம்**

## துணிந்தெழு பெண்ணே..!

துணிந்தெழு பெண்ணே…!
புதுமைப் பெண்ணே ஏன் பதுங்குகிறாய்
பாய்ந்து வரும் கங்கையன்றோ நீ…!
ஆற்றலுள்ள கண்ணே வீணே கலங்குகிறாய்
உரிமையுண்டு துயில் கலைந்திடு நீ….!

மங்களம் மறந்த மங்கையாக இராதே
மதிக்கப்படும் நங்கையாக இரு நீ..!
சங்கடம் நிறைந்தாலும் அங்ஙனம் நோக்கு
சாக்கடையிலும் தங்கமென மின்னலாம் நீ….!

சமுதாயம் துரத்து(மு)ன்னை சலிக்காதே
சதிகளெனும் சல்லடையில் மிளிராதே நீ..!
சமுத்திரமே திரண்டாலும் எதிர் நீச்சலிடு இங்கே
சரித்திரமே படைத்திடலாம் துணிந்தெழு நீ…!

கலியுகமென கலையுலகில் விலகாதே
கயவனின் தலையருக்கு விதியே நீ…!
கலக்கம் விடுத்து விலங்குடைத்து வா
காலங்களுக்கே கலங்கரை நீயே…!

**சிமாயா காதர்**
**அலுப்பொத்தை**
**படல்கும்புரை**

## காலாவதியற்ற இலட்சியம்

காய்ந்து போன இலைகளுக்கிடையே முதன் முதலாக விழும் நீர்த்துளியாய் ஹனியாவின் தொண்டையை நனைத்தது அவள் பருகிய இரு சொட்டுத் தண்ணீர்.

“ என்ன நீ..? இப்படி வேலை செய்து செய்தே நோயாளி ஆகியாச்சா..? குடும்பத்துக்கும் பெண் பிள்ளைகளுக்குமா ஓயாம கஷ்டப்பட்ட.... இப்ப ஒன்ன ஏறெடுத்துப் பார்க்கக் கூட யாருமே இல்லையே...'' ஹனியாவின் நிலை கண்டு நொந்து போனாள்.. அவர்கள் முன்னர் குடியிருந்த வீட்டின் அயல் வீட்டவளும் ஹனியாவின் நெருங்கிய தோழியுமான முனீரா.

“ பிள்ளைகளென்றாலும் ஒரு நன்றிக்கடன் இருக்கோணும்'' மீண்டுமாய் அலட்டிக் கொண்டவளைக் கண்டு கொள்ளாமல் தன் பேச்சை மாற்றினாள் ஹனியா. நேரத்தின் நகர்வு வைத்தியசாலையின் பார்வையாளர்களை வெளியேற்ற ஆயத்தம் செய்ய அவளிடமிருந்து விடை பெற்ற முனீராவை வழியனுப்பியவள் கட்டிலில் சாய்ந்தாள் மெதுவாக.

கரடுமுரடுமாய் ஆங்காங்கே கொப்புளம் ஒட்டிக் கொண்ட கைகள் அவளைப் பார்த்து மெதுவாக நகைத்தன. தன் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை அனைத்தையுமே தனது ஊரான கண்டியிலேயே முடித்தவளின் பேரவா தானொரு மிகச் சிறந்த வைத்தியராக வர வேண்டும் என்பது தான். வசதியில் குறையில்லாத ஹனியாவுக்கு வாழ்வில் முதல் தடையாக அமைந்தது அவளது திருமணம் தான். அதன் பின்னரான எல்லாமே கனவு போல் நடந்தேற கணவன் சியாமுக்கு அவள் ஒரு வீட்டுக்குள் அடங்கிய பெட்டிப் பாம்பாக இருப்பதில் தான் ஆசையும் கூட. மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களை வளர்த்து அதிலேயே தன் வாழ்நாளைக் கழித்த ஹனியாவுக்கு வயதொன்றும் அப்படி அதிகமில்லை.

தன் நினைவுகளுக்குள் சுழன்றவளை திடுக்கிட வைத்தது ஒரு சிறுவனின் அழு குரல். வாகன விபத்தில் சிக்கித்தவித்த சிறுவனுக்கு மருத்துவம் செய்ய ஓடோடி வந்த வைத்தியர் பத்மாவை ஆச்சரியப்பட வைத்தது அங்கே நடந்த காட்சி ஆம் அங்கே சிறுவனுக்கான முதலுதவி நடந்து கொண்டிருந்தது. இத்தனை கச்சிதமாக அந்த சிறுவனைக் கையாளும் அந்த வைத்தியர் யார்?

ஆம் சந்தேகமின்றி அவள் ஹனியா தான் இழக்காத அவளது மாறாத் துணிச்சலுடன் அங்கே சிங்கப் பெண்ணாக ஹனியா.

**ஷப்ரா இல்முத்தீன்**

**அட்டாளைச்சேனை.**

## புலம்பல்

யாருமில்லா ஆள் அரவமற்ற அந்த வீதியின் ஓரமாய் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில குடிசைகள். அக்குடிசைகளின் மத்தியிலே ஒரு குடிசையின் வாசலில் நாயொன்று வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்திருந்தது. பிள்ளைகள் இருவரும் திண்ணையில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

பூமிக்கு வெளிச்சத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருந்த கதிரவனின் ஒளிக்கீற்று சிறிது சிறிதாய் மறைந்து இருளை உள்வாங்கிக் கொண்டிருந்தது. மங்கிய விளக்கின் ஒளியில் அமர்ந்திருந்தா் நிஷா. இரவுச் சாப்பாட்டிற்கான ஆயத்தங்களைச் செய்ய முற்படுகையில் கண்களில் அன்றைய உணவிற்கான அத்தியாவசியப் பொருட்கள் எதுவுமில்லை என்றான போது சற்றே திகைத்து நின்றாள்.

சேலைத் தலைப்பை எடுத்து இடுப்பில் சொருகியவள் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்தாள். “ ஆக்க ஒரு பிடி அரிசியில்லை. புளியில்லை பிள்ளைகள் பட்டினி கிடந்து சாகுதுகள் எங்கயாச்சும் வேலை செஞ்சு புழைக்கலாம் என்று பார்த்தா அதுக்கும் விர்ர பாடில்ல”

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவளது இளைய மகன் குறுக்கிடவும் இடையில் பேச்சை நிறுத்தினாள் நிஷா. மகனின் பக்கம் திரும்பினாள், மகன் “ ம்மா இன்னா நாநா அடிக்காரும்மா” என்றதும் நிஷா “சும்மா இருங்கடா சண்ட பிடிக்காம என் வேதனையில இவனுங்க வேற” என்றவள் தன் புலம்லைத் தொடர்ந்தாள்.

“ கடனாச்சும் பட்டுத் திங்குறதுக்கு இந்த ம.்.ரிப் பொழுதுல எங்க போய் கடன் கேக்குறது யார் தருவாங்க?” என தனக்குள்ளே கேட்டுக் கொண்டவள் கண்களில் பனித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். “ அவராச்சும் உழைக்காரா? அதுவுமில்ல என்னால முடியல்லண்டா எப்புடி…? நானாச்சும் வேலைக்குப் போறன் என்றா அதுக்கும் போக விர்ரார் இல்ல பொம்புளப் புள்ளக்கி என்ன வேல” என்று கேட்கார். “ இப்படியே இருந்தா இந்தக் குடும்பத்த யார் காப்பாத்துற,.? எல்லாம் என்ர தலையெழுத்து என் நிலமய யாருக்கிட்டப் போய்ச் சொல்வேன்.” புலம்பிக் கொண்டிருந்தாள் அவள்.

சாய்மணையில் சாய்ந்திருந்தவர் எழும்பிச் சென்றார்.. “ கொஞ்சம் சத்தம் போடாம சும்மா இரி புள்ள இன்றைக்கு என்னயாச்சும் செஞ்சி சமாளி நாளைக்கு உனக்கு உழச்சிக் கொண்டு வந்து தாறன் நீ தேவையானத வாங்கிக்க” என்றார் அந்த முதியவர்.

கொரோனா என முத்திரை குத்தப்பட்டு ஆறு மாதங்களுக்கு முன் தன் கணவனை இழந்த அந்த விதவைப் பெண்ணிடம் வேறு என்ன தான் ஆறுதல் கூற முடியும் அந்த வயதான தந்தையால்….

**எம்.எஸ் றஸ்மியா**

**வரிப்பத்தான்சேனை**

## விடியல் தேடும் விட்டில்கள்

இன்னும் அவர்கள் பேச முடியாத படி
அடக்கப்பட்டிருக்கின்றார்கள்
எழுந்து செல்ல கால்களுக்கும்
விலங்கிடப்பட்டிருக்கிறது.

பறந்து செல்வதற்கான சிறகுகளை
விரிக்கிறார்கள்.
அவர்களுக்கான வானம் அறைச்
சுவராகவே தெரிகிறது.
வாழ்வின் கனவுகளை
உயிரின் உணர்வுகளை
மனதின் தவிப்புக்களை
தமக்குள்ளேயே
புதைத்துக் கொண்டு

உயிரற்ற புன்னகை உதட்டில்
தோன்ற அதையும்
துடைத்து விடுகின்றார்கள்.
சதையிலான ஒரு உருவமாக
அவர்களைக் காணும் உலகு
அவர்களுக்கான உலகை
இருட்டாகவே காட்டுகிறது.

விடியல் தேடும் விட்டில்களாய்
அவர்கள் இன்னும் வாழ்வை
தடவிப் பார்த்துக் கொணடே
வாழ்கிறார்கள்
வெளிச்சத்தின் மீது
நம்பிக்கையற்றவர்களாக...

**றிப்ஹா அன்சார்**

**சாய்ந்தமருது.**

## பெண்மையின் பெருமிதம்

அன்பு பண்பு உணர்வுகள் உணர்ச்சிகள்
அழகுற சேர்ந்த கலவை அவள்
இறைவன் படைப்பில் அவளுக்கே முடியும்
இன்னொரு உயிரை சுமக்கும் சக்தியே

தாய் மகள் சகோதரி மனைவி
அவளது அத்தனை உறவுகளும் அற்புதமானதே
அத்தனையிலும் தாய்மை வரமானதே
இரத்தமும் பாலாகும் அவளுக்கு மட்டுமே....

உதிரம் வெளியேற்றிய அங்கங்கள் சுத்தமே
வலிகளிலும் வலிமை பெற்றவளே
தனித்துவமான கதாபாத்திரம் அவளே
புதிதாக வேடம் கொடுக்க முனையாதீர்கள்

கொடுங்கள் தருவாள் எடுத்ததை விடவும்
நேசம் காட்டுங்கள் கொட்டிடுவாள் இன்பத்தை
மதிக்கப்பட்டால் அவளுடைய திறமைகள்
உட்காரலாம் அவளுடைய இதய சிம்மாசனத்தில்

சாதிக்கவும், ஆலோசனை தரவுமானவள்
ஆணுக்கு நிகராக சரிசமமாய் உழைப்பவளும்
ஓய்வு நேரத்திலும் ஓயாமல் இருப்பவள்
ஆளுமை நிறைந்த பெட்டகம் அவள்

**ஜெய்னுலாப்தீன் றிஸ்வானா**
**மடவளை பஸார்**

# இருள் விலகட்டும்

உன்னை அறிமுகம் செய்ய தடுமாற்றமடைகிறாய்
உன்னை அறிமுகம் செய்ய சொற்கள் தேடுகிறாய்
அழியாத முகவரியே நீயாய் ஆனவளே....

முகவரியற்றவனுக்கு முகவரி கொடுக்க
உன் முகவரியை அடகு வைத்தவளே
உன் முகவரியைத் தொலைத்து
பதுங்கியிருந்தது போதும்

உன்னைப் பிரகடனப்படுத்து
உன் முகவரியை பிரகாசப்படுத்து
உன் சுயங்களுக்கு உயிர் கொடு

கோழைப் பெண்ணல்ல நீ
நீ அன்பின் மகாசக்தி
ஆற்றல்களின் சிம்மாசனம்
இன்னொரு தடவை
உன்னை அறிமுகம் செய்ய
தடுமாறாதே துணிந்தெழு...

**சம்மாந்துறை மஷூறா**

## உள்ளக்கதவை மெல்லத் திறந்து.......

பெண்ணும் பென்னுமாய்ப் பேருலகம் காணச் செய்த இறைவனையும் Srilanka pen club ஐயும் போற்றிப் புகழ்ந்தவளாக

Srilanka pen club மூலம் நாங்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தையும் , ஆற்றலையும் அக மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கின்றேன். வெற்றுக் காகிதங்களாய்க் கிடந்த எங்கள் எண்ணங்களெல்லாம் அழகிய ஓவியங்களால் இன்று அலங்கரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றன. எங்களுக்குள் எழுதும் ஆற்றல் இருப்பினும் ஒரு மூலைக்குள் முடங்கிக் கிடந்தோம். இவ்வாறானவர்களை இனங்கண்டு Srilanka pen clubன் ஸ்தாபகத் தலைவி திருமதி மஷூறா சுஹுறுத்தீன் அவர்கள் களம் வழங்கினார்கள்.

முகநூல் வழியாகவும், ஏனைய இலக்கிய நல்லுள்ளங்கள் ஊடாகவும் எங்களைத் தேடியறிந்து நாங்கள் பெண்கள் தானா என்பதைத் தொலைபேசியூடாக அழைத்து உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே இந்த அமைப்பின் வாட்ஸ்அப் குழுமத்திலும் இணைத்துக் கொண்டார். அல்ஹம்துலில்லாஹ். இணைந்ததும் “இங்கு பெரிய பெரிய ஆளுமைகளும் சிறந்த எழுத்தாளர்களும் இருக்கின்றார்களே இங்கு எப்படி நம்மால் பயணிக்க முடியும்?” என்று எண்ணிக் கொண்டே பயணிக்க ஆரம்பித்தோம்.

தலைவி எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் புகுந்தார் காலப்போக்கில் எங்கள் ஒவ்வொருவரினதும் ஆற்றல், ஆளுமைகள் ஏன் எங்கள் குறைகளையும் இனங்கண்டு எங்களைப் பட்டை தீட்டினார். எங்கள் பேனைகளை தலையணைக்குக் கீழ் வைத்துக்கொண்டு தூங்கிய காலம் போனது. அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப 30 நாட்களையும் பிரித்து ஏற்படுத்தப்பட்ட பல நிகழ்ச்சித் திட்டத்தால் நாங்கள் அனைவரும் புடம் போடப்பட்டோம்.

தூங்கிய எங்கள் பேனைகள் எழுதத் தொடங்கின. எங்களாலும் முடியும், இன்னும் முடியும் என்ற உத்வேகத்தையும் தைரியத்தையும் Srilanka pen club தந்துள்ளது. செய்யும் தொழிலும் குடும்ப வாழ்க்கையும் குழந்தை வளர்ப்பும் என்றிருந்த எங்களை வெறுமனே வீட்டோடு முடங்கிப் போகும் பெண்கள் அல்ல ஆற்றலுள்ள ஆளுமை உள்ள பெண்கள் என எங்களுக்கே இனம் காட்டியது இந்த Srilanka pen club தான் என்பதில் நாங்கள் ஒவ்வொருவரும் பெருமைப் படுகின்றோம்.

இங்கு கவிதை மட்டும் படைக்கவில்லை பல்கலையும் கற்றோம், மார்க்கமும் கற்றோம்,மருத்துவமும் கற்றோம், சமயமும் கற்றோம், சமயோசிதமும் கற்றோம், தொழில்நுட்பமும் கற்றோம். மாதத்தின் ஒருநாள் மனம் விட்டுப் பேசி மனப்பாரம் கலைத்தோம். இன்னொரு நாளில் கலாய்த்து கண்ணீரைத் துடைத்தோம்.

இந்த வகையில் சனிக்கிழமைகளில் நான் பொறுப்பெடுத்து என்னால் முடிந்தவரை சிறப்பாக நடாத்தி வருகின்ற ஒரு நிகழ்வுதான் Book Bank இந்நிகழ்வானது எமது குழும உறுப்பினர்களினால் வெளியிடப்பட்ட நூல்கள் மற்றும் பிற சிறந்த எழுத்தாளர்களின் காத்திரமான நாவல்கள் கவிதைத் தொகுதிகள் போன்ற நூல்களை PDF வடிவில் குழுமத்தில் பகிர்ந்து அவை பற்றி சிலாகித்துப் பேசும் இந்நிகழ்வானது பெரு வரவேற்பைப் பெற்றதுடன் பலரது வாசிப்புத் திறனையும் அதிகரித்துள்ளது எனலாம். குழுமத்தில் மட்டுமல்லாது வெளியில் உள்ளவர்களின் வாசிப்புத் திறனையும் அதிகரிக்கும் நோக்குடன் Book Bank நேரடி நிகழ்வாகவும் நடத்த முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றோம் இறைவன் துணை செய்வானாக.

மேலும் சொல்வதெனில் எழுத்துலகில் எதை எழுதலாம் எதை எழுதக் கூடாது அதை எங்கு கொண்டு செல்வதால் எமது படைப்புக்கள் அடிமட்ட மக்களையும் சென்றடையும் என்பதை எல்லாம் எமது தலைவியின் சிறந்த வழிகாட்டல் மூலம் எங்களுக்கு ஊட்டப்பட்டு எதிர்காலத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களாய் மிளிர எங்களை பட்டை தீட்டிக் கொண்டிருக்கும் மிகப் பெரும் பணியை இந்த Srilanka pen club செய்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

எங்கள் Srilanka pen club ஆனது தற்போது இன்னும் அகலக் கால் பதித்துள்ளது சுமார் 150 ஐயும் ;தாண்டிய உறுப்பினர்கள் உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இணைந்துள்ளனர். இதனால் நாங்கள் இருந்த இடத்திலிருந்தே எழுந்து நடக்கின்றோம் எனலாம். இன்ஷா அல்லாஹ் விரைவில் இன்னும் உயர்வோம் என நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எமது முதலாவது வெளியீடான ”சுட்டுவிரல் கவிதைத் தொகுதியும் பெண் எழுத்தாளர் மாநாடும்” அண்மையில் வெகுசிறப்பாக பிரம்மாண்டமான விழாவாக நடந்தேறியது. அல்லாஹ்வுக்கே எல்லா புகழும் இது இலங்கை பெண் எழுத்தாளர்களின் முதல் கவிதைத் தொகுதி என்ற தடயத்தையும் பதித்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். இவ்விழாவில் பின்னர். Srilnka pen club அனைவராலும் அறியப்பட்டு இன்னுமின்னும் அதிகமான பெண்கள் எங்களோடு இணைவதற்கு ஆயத்தமாகும் சூழ்நிலை உருவாகியுள்ளதெனலாம். Srilnka pen clubஇன் இரண்டாவது படைப்பாக இந்த ”அவரி” சஞ்சிகையையும் வெளியிடுகின்றோம். இதற்காய் துணை செய்த வல்ல இறைவனை மறுபடியும் போற்றிப் புகழ்ந்தவளாக இன்னும் பல தடைகளைத் தாண்டி சாதனைகளை நிலைநாட்டுவோம், என்ற நம்பிக்கையுடனும் பெருமிதத்துடனும் கூறிக்கொள்கின்றோம்.

**பர்சானா எம்.பி.**

**நிந்தவூர்.**

## பெண்களும் சம உரிமையும்

மேலான அறிவினில் வளர்ந்த
மேலே நாடுகளில் பெண்கள்
கீழான அடிமை நீங்க
கேட்கின்றார் சமமாய் உரிமை

பத்திரிகைகள் மேடைகள்
இன்னும் மகா நாடுகளில் - பெண்கள்
பக்கம் பக்கமாய் எழுதியும் பேசியும்
பலவாறு தம் நீதியைக் கூறுகின்றார்.

ஆடையில் மட்டுமின்றி
அறிவில் தொழிலில் - பெண்கள்
அனைத்திலும் ஆணுக்கு நிகராய்
ஆகிட வேண்டுமாம் உரிமை

**புசல்லாவை இஸ்மாலிகா ராஜா**

## குடும்பப் பெண்

நாள் முழுதும் சுழலும் சக்கரம் போல்
அயராது வேலை செய்திடுவாளவள்
கல்நெஞ்சம் இல்லை அவள் மனது
மாதா மாதம் வலியையும் தாங்கி

ஒரு கணவனுக்கு நல்ல மனைவியாய்
ஒரு குழந்தைக்கு நல்ல தாயாய்
ஒரு இடத்தில் பல உறவாய்
ஆற்றல் மிகுந்தவள் பெண்

சொல்ல முடியாத வலியும் அவளினுள்
எல்லையில்லா சுகமும் அவளினுள்
இரண்டிற்கும் அடையாளமாய் ஈன்றெடுப்பாள் உயிரை
சுமைகளைக் கூட சுகங்களாய் எண்ணி வாழ்கிறாளவள்

ஒரு ஆணால் கூட தாங்க முடியுமோ
மரணத்திற்கோ வயதில்லை
அவள் பாசத்திற்கோ அளவே இல்லை.

**நஜீபா ஹம்தான்**
**நீர் கொழும்பு**

## எந்த மை கொண்டு எழுதப்பட்டிருக்கிறாய் நீ

இயலாமை, அறியாமை இரண்டில்
எந்த மை கொண்டு எழுதப்பட்டிருக்கிறாய் நீ

உரிமை இல்லா அடிமையா?
ஊமை போன்றொரு பதுமையா?
கட்டிலுக்கு நேர்ந்த பொம்மையா?
கண்ணியத்தில் என்றும் வறுமையா?
எந்த மை கொண்டு எழுதப்பட்டிருக்கிறாய் நீ....?

கறை படிந்த மையினால்
சுமையாக சித்தரிக்கப்பட்டு
சிறுமையால் சிதைக்கப்பட்டவளே..!

ஆயிரம் போர் வீரரின் ஆத்மபலத்தை - ஒரு
பிரசவத்தில் நிரூபித்தவள் நீ...!

உன் வலி“மை“யை ஊராரிடம்
அடகு வைத்து விடாதே
வானவில்லைப் பறித்தெடுத்து
புதுமையால் நிறந்தீட்டி
வாழ்க்கையை அலங்கரித்துக் கொள்!

**கலாநிதி: மரீனா இல்யாஸ் ஷாபி**
**நியூசிலாந்து**

**பல தடைகளைத் தாண்டிய இவள் சாதனை**

அடுப்பங்கரை
விளக்கல்ல பெண்கள்
அகிலத்தை ஆளவைக்கும்
அதிசயபிறவிகளே பெண்கள்
அவளைப்பற்றி வசைபாடுவோருக்கும்
அவளில் சாதனையே
அவர்களின் வாய்க்குப் பூட்டு

நங்கையாய் மாதாவாய் அவள்
சாதிக்க போராடும் போராட்டமோ
அவளின் வியர்வைத் துளிகள்

பாலூட்டும் குழந்தையைக் கூட பக்கத்து வீட்டில்
பத்திரமாய் பாதுகாக்க விட்டு பல தூரம்
தன் இலக்கை நோக்கி வீறுநடை
போட்டு துணிந்து சென்று
வெற்றி மகுடம் சூட்டுபவளே அவள்

ஆயிரம் பிரச்சினைகளுக்கு
அல்லும் பகலும் அயராது உழைத்து
அகிலத்தின் கேள்விகளுக்கெல்லாம்
அமைதியாய் பதிலளித்து
பாதி உண்மை பாதி பணி செய்து
தன் இலக்கை அடைய அயராது பாடுபட்டு
வெற்றி மகுடம் சூடுபவளே பெண்.

**பஹ்ரியா பாயிஸ்**
**ஹெம்மாதகம.**

## வெற்றி பெறுவோம்

மானுடம் செழித்தோங்க
மங்கையர் எம் வாழ்வு மலர
காணும் கனவுகள் யாவும்
காட்சியாய் இங்கு மாறும்

அச்சத்தை களைந்தெறிந்து
அரிவையர் எம் ஆளுமைகள்
அவனி எங்கும்
நாளை பவனி வரும்

பாரெங்கும் பெருமை ஓங்கும்
ஊரெங்கும் உயர்வாய் போற்றும்
மார்தட்டி மகளிர் நாம்
மேதினியில் மகிழ்வுறுவோம்.

மங்காத எம் புகழ்
மாந்தரிடையே மிளிர்ந்திடும்
தங்காது நாம் சென்றிடினும்
தாங்கி வாழும் எம் நாமம்

சூழ்ந்து வாட்டும் இருள் களைந்து
சுடரொளியாய் நாம் மாறி
வீழ்ந்திடாது பயணிப்போம்
வெற்றி வாகை சூடிடுவோம்.

**கலேவெல**
**லறீபா பதுர்தீன்**

## தடை தாண்டல்

அண்டை வீட்டு கொண்டைச்சேவல்
அலாரத்தினையே முந்திக் கொள்கிறது
நெட்டி முறித்த கதிரவன்
விரல் நீட்டும் முன்பே
அன்னையின் அதிகாலை ஆலாபனை

தொடர்ந்தும் பழக்கப்பட்டுப் போன
அதே நிகழ்ச்சி நிரல்
ஏளனமாய்ச் சிரிக்கும்
என் வீட்டு கண்ணாடி

நிரலின் நிகழ்ச்சி தொகுத்து கிடக்க
ஒவ்வொன்றாய் முடிக்கும் முன்பே
கூனல் விழுந்த கிழவியாய்
சுருங்கிக் கொள்கிறது மனது

ஒவ்வொரு நாட்களும்
நிமிடங்களும் போர்க்களமாய்
ஒரு வழியாய் ஒரு தடை தாண்டி ஓய்கையில்
அண்டை வீட்டுக் கொண்டைச்சேவல்
அலாரத்தினையே முந்திக் கொள்கிறது
ஓ....
ஐந்து போத்தல் ஆசிட்டை
அப்படியே குடித்தவனைப் போல்
நெஞ்சம் பதறி நிற்கையில்

மீண்டும் அதே அண்டை வீட்டு
கொண்டைச்சேவல் அதிலேயே முந்திக் கொள்கிறது
அதே நிகழ்வு அதே பொழுது மீண்டும் மீண்டும்
ஏன் தான் புலர்ந்து தோன்றுகிறதோ

**பாத்திமா ஸூபா**

**மருதமுனை**

## சாதாரணமான அவளின் அசாதாரணங்கள்

### ஆம் அவள் பெண்!

ஆதம் என்ற தனி ஆண் வாழ்க்கைக்குள் ஒரு இடைவெளி. அந்த வெளியைப் பூரணப்படுத்த, இறைவன் ஏற்படுத்திய ஒரு துணை, ஒரு ஓட்டுப் படைப்பு அது பெண். அந்த அருமையான படைப்பில் அழகான பருவங்கள். அருமையான படிமங்கள் அட! அத்தனையும் அது விசேஷம்: உயர்ந்த தரம்: அத்தனை மாண்பு: உலகில் யாருக்கும் கொடுக்கப்படாத சிறப்பு: ஆம் அனுதினமும் கொண்டாடப்படும் பெண்மை அதுவே.

பிறந்த பெண் குழந்தைக்கு சுப சோபனம் கூறி வாழ்த்தி வரவேற்கிறது மார்க்கம். இந்த உலகமும் மறுஉலகமும் அருள் நிரப்பும் சோபனம் அது. பெண் குழந்தை இருக்கும் வீடுகள் கிருபை நிரம்பியது. அந்தக் குழந்தை வளர்ந்து பூப்படைந்து ஆளாகியதிலிருந்து அவளுக்கு உண்டாகும் மாற்றங்கள், வலி, வேதனை என்பவற்றிலிருந்து பொறுமை என்பதனை யாருமே கற்றுக் கொடுக்காமல் அனுபவித்து கற்று விடுகிறாள். அவள் மூச்சிருக்கும் வரை அது அவளோடு ஓட்டி விடுகிறது. ஓடியாடிச் செல்லும் தன் ஓடு பாதையில் ஒவ்வொரு புள்ளியிலும் ஏதாவது ஒரு முள். அது என்ன தான் முள்ளாக இருந்தாலும், ஒன்றோ அதைத் தாண்டுவாள். அல்லது அதைத் தடுப்பாள். அதுவும் இல்லையேல் அதைத் தாங்குவாள். இத்தனையிலும் ஒரு உயிரால் சிரிக்க முடிகிறதெனில் அவள் தான் பெண்..!

அவள் பலவீனமும் அவள் மென்மையும் காரணமாகி அவளை யாருமே எதுவுமே உடைத்து விடக் கூடாது என்ற ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது மார்க்கமும், சட்டமும், சுற்றமும் அவள் தெளிவானவள். இந்தக் கூற்றும் சட்டமும் கட்டளைகளல்ல, அவை அவளுக்கு விடுக்கப்படும் வேண்டுகோள்கள், அவளுக்கான வேலிகள் என்பதனை புரிந்து கொண்டு அவளந்த நிமிர்ந்த நடையிலும் நேர்கொண்ட பார்வையிலும் தன் எண்ணங்களை வடிகட்டிக் கவசம் இடுகிறாள். இந்த வடிகட்டல் அவளைத் தூய்மையாக்குகிறது. அவள் மாணிக்கமாய் ஜொலித்து பிரகாசிக்க வேண்டுமென தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும். களங்கத்தை விரும்பாதக திரவள்.

சம உரிமைக்காக போராடாவிட்டாலும், தன்னுரிமையை மதித்து கொண்டாடுகிறாளெனில் அது அவளது கோழைத்தனம் அல்ல, அது பெண்மையின் மென்மைக்குரிய தைரியம். இந்தக் கட்டுப்பாடுகளிலும் கைதேர்ந்து காரியம் சாதிக்கும் அவள் பெண்!

விளை நிலங்கள் விளைச்சலுக்காக தயார் படுத்தப் படவேண்டியவை. அதற்காக தம் மீது தம்மைக் கொத்திப் பண்படுத்தி, பதப்படுத்திக் கீறி உழுவதற்காக, எல்லாவற்றுக்கும் நெகிழ்ந்து கொடுத்து அனுமதித்து தன்னையே அர்ப்பணிக்கிறாள். மேய்ச்சல் நிலமாக மாறி தன் மீது செலுத்தப்படும் அற்பங்களையும் அற்புதமாக்கிக் காட்டும் ஒரு மேன்மை. அவள் தான் பெண்!

அவள் ஒரு கலங்கரை விளக்கம் என்பதை புரிந்து, வாழ்க்கையில் தன்னை மறந்து வெளிச்சம் கொடுக்கத் தொடங்குகிறாள். அந்த வெளிச்சத்தை நுகரும் உயிர்களைப் பார்த்து தனக்குள் மௌனமாய் சிரிக்கும் அழகு ஒரு பேரழகு அதுதான் பெண்ணழகு.

“நின்று கொண்டிருப்பதால் மலைகள் ஒரு போதும் கடுகடுப்பதில்லை.

ஓடிக்கொண்டு இருப்பதால் நதிகள் ஒருபோதும் களைப்படைவதில்லை.

தாங்கிக் கொண்டு இருப்பதால் பூமி ஒரு போதும் உடைந்துவிடுவதில்லை.

வெந்து கொண்டிருப்பதால் நெருப்பு ஒருபோதும் வலி சொன்னதில்லை.

இந்த காற்றாக, மலையாக, நெருப்பாக, நிலமாக அவள் இருக்கிறாள். என்பதில் அவளுக்கு இணை அவளே தான். அதில் யாருக்கும் இதுவரை சந்தேகம் எப்போதும் வந்ததில்லை.

உலகமே

உன் தாய் அவள் நிலம்!

உன் சகோதரி அவள் காற்று!

உன் மகள் அவள் நீரூற்று !

உன் தோழி அவள் நெருப்பு

உன் மனைவி அவள் ஆகாயம்.

ஒரு பெண்மை மூலம் இந்த வரங்களை உனக்குத் தராத வெறுமை பெற்ற வாழ்க்கை யாருக்காவது வாய்த்து இருக்கிறதா? எப்பொழுதுமே இல்லை

ஆக

பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் என்று அவள் கண்ணீரை விரும்பாமல் அவளை காப்பாற்ற சொல்கிறது மறை.

”என்னைப் பின்பற்றுபவர்களில் ஆண்களில் சிறந்தவர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு சிறந்தவர்கள் என அவள் மார்க்கத்திலும் சமூகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட ஒருத்தியாய் ஆகியிருக்கிறாள்.

அவளும் அற்புதம். அத்தனையும் அற்புதம், அவள் பொறுமையும், அவள் அமைப்பும், அவள் அமைதியும், அவள் மென்மையும், அவள் தைரியமும், அவள் உழைப்பும், அவள் வீரமும், அவள் சகிப்பும், அவள் திறமையும், அவள் சமயோசிதமும், அவள் முடிவும், ஏன் அவள் வலிகளுங் கூட வலிமையானது. விசித்திரமானது. அசாதாரணமானது. இத்தகைய பெண்மையை அரவணைக்கும் இன்னொரு பெண் ஆகட்டும் அல்லது ஆணாகட்டும் அவள் அசாதாரண உணர்வுகளோடு கலந்து ஐக்கியமாகி உலகத்தை அழகாக்கும் என்பதில் எந்த ஐயமும் வேண்டாம். ஏனெனில் சுவனத்திற்கு கொண்டு செல்லும் ஒரு அற்புதம் அவள் படைப்பு. ஆம் அவள்தான் பெண்.!!

**லைலா அக்ஷியா**

**மொரட்டுவ**

## நான் பென் கிளப் அங்கத்தவரான பிறகு

ஒவ்வொருவரின் வாழ்விலும் ஏதோ ஒரு திருப்புமுனையால் மாற்றங்கள் ஏற்படுவது நியதி. அந்த வகையில் என் வாழ்வில் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி என் வாழ்க்கையை மாற்றி அமைத்த நாள் எனலாம். அன்றுதான் ஸ்ரீலங்கா பென் கிளப்பில் இணைந்த நன்னாள். பல ஆளுமைகளுடன் பயணிக்கத் தொடங்கினேன்.அக்டோபர் மாதம் 3 ஆம் தேதி முதலாவது நிகழ்ச்சி நெறியாளராக செயல்படக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றைய நிகழ்ச்சிக்கு சிறந்த பின்னூட்டங்கள் கிடைத்தன. அன்றைய நிகழ்ச்சி என் பல வருட ஆசைக்கு தீனி போட்டது என்று கூறலாம். ஆம் வானொலி அறிவிப்பு முறையில் அன்றைய நிகழ்ச்சியை செவ்வனே செய்ததாக பல பின்னூட்டங்கள்.. அது என் கலைப் பயணத்தின் மைல்கல் எனலாம். அதன்பிறகு அவரி என்ற சஞ்சிகையை தயாரிக்கும் பொறுப்பு எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும். அதிலும் பிரதம ஆசிரியராக.... பல நல்ல ஆளுமை பெண்களின் அறிமுகம், வழிநடத்தல் என்னை புடம் போட்டது என்று தான் கூற வேண்டும்.. முன்பு ரசிகையாக யாரையெல்லாம் வியப்புடன் பார்த்தேனோ அவர்களுடன் மிக நெருக்கமாக பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டியது.

அது மட்டுமன்றி மாதத்தின் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அதன் நெறியாளராக இருப்பது அதிலும் மிக ஆளுமை பொருந்திய கலாநிதி. மரீனா இல்யாஸ் ஷாபி அவர்களின் நட்பு, வழிநடத்தல் அவரின் மொழிபெயர்ப்பு கவிதைகளுக்கு நெறியாளராக இருப்பது மாதம் ஒரு முறை சஞ்சிகை நிகழ்ச்சி தயாரித்து வழங்குதல் என பல நிகழ்ச்சிகளில் என்னை, ஈடுபடுத்தக் கூடிய சந்தர்ப்பம் அமைந்தது. இவை எனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று தான் கூற வேண்டும். ஒரு பிள்ளையின் ஆற்றல்களை தாய்க்குப் பிறகு ஒரு ஆசிரியை இனங்காண்பதுண்டு. அதுபோலவே என்னுள் புதைந்து கிடந்த திறமைகளை இனங்கண்டு அதற்குக் களம் அமைத்து தந்த எங்கள் தலைவி மஷூறா சுஹூருத்தீன் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன். திறமைகளைத் தட்டிக் கொடுத்து பாராட்டி சீரிய வழி நடாத்திச் செல்லும் எங்கள் தலைவிக்கு நிகர் அவரே தான்.

குழுமம் வெறுமனே எழுத்துத்துறை மட்டுமல்லாமல் சமையல், கைப்பணி, பாடல்கள், இஸ்லாமிய நிகழ்ச்சி போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும் நடத்துவதன் மூலம் எங்கள் ஆற்றல்களை இன்னும் விருத்தி செய்ய ஏதுவானது. அதே நேரம் ஒரு சிறு காலப்பகுதியிலேயே நான் இலங்கை பென் கிளப்பில் இணைச் செயலாளர் பதவிக்குத் தேர்வானேன். உண்மையில் கூறப்போனால் அதன் பிறகு என் தன்னம்பிக்கை வளர்ந்தது அதிகம் என்று தான் கூற வேண்டும். மிகப் பிரபலமான சஞ்சிகையான துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் இடம் பெற இதுவொரு அடையாளமாகியது. இலங்கையின் நாலா பக்கங்களிலும் உள்ள முஸ்லிம் படைப்பாளிகள் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இவை அனைத்துக்கும் காரணகர்த்தாவாக எனது தலைவி மஷூறா சுஹூறுத்தீன் அவர்களின் நேரான வழிகாட்டல் தான் என்றால் மிகையாகாது. இப்பென் கிளப்பில் ஒரு உறுப்பினராக அங்கம் வகிப்பதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

**ஷாமென் நிஸாம்டீன்**

**(இணைச்செயலாளர் இலங்கை பென் கிளப்)**

**கட்டுகஸ்தோட்டை.**

## பெண்ணென்றும் சிறந்தவள்

உயிரைக் கொடுத்து
உயிரைத் தரும் உயர்ந்த
ஜீவன் என்றும் தாயவளே

உண்மை அன்பை கொட்டி
உயிராய்க் கணவனை என்றும்
உளமாற நேசிப்பவள் மனைவியே

அன்பு பாசம் நேசம் கொண்டு
அழகாய் எம்மை வளர்ப்பவளும்
என்றும் பெண்ணவளே

தாயாய் தாரமாய் மகளாய் வாழ்வில்
பல வடிவம் கொண்டு
குடும்பக் குவலயத்தை அழகாய்
கட்டிக் காப்பவளும் பெண்ணவளே

தரணி போற்ற பெற்றெடுப்பதும்
பெயர் சொல்லும் பிள்ளையாய் அதை
பேணி வளர்ப்பதிலும் என்றும்
பெயர் பெற்றவளும் பெண்ணே

வீரமும் விவேகமும் நிறைந்த பெண்மை
விண்ணையும் மண்ணையும் ஆண்டே தான்
நகர்கிறது அகிலம் போற்ற

**எம்.ஏ. மாஹிறா**

**மருதமுனை**

## லிமரைக்கூக் கவிதைகள்

1.

கூரையில் அமர்ந்தது காகம்/
மழையில் நனைந்து பறக்க முடியாது/
குளிரில் நடுங்கிய தேகம்.

2.மழையால் பெருகியது வெள்ளம்/
வீதி வழியே ஓடி வடிந்ததும்/
வீதி எங்கும் பள்ளம்.

3. பூக்கள் மலர்ந்த சோலை/
தொண்டர்கள் சூழ தலைவர் வருகின்றார்/
கழுத்து நிறைய மாலை.

4. வாடிக் கிடக்கும் பயிர்கள்/
வறட்சி நீங்கிட மழையும் இன்றி/
பசியால் மடியும் உயிர்கள்.

5. ஓடியோடி உழைத்தான்/
தேடும் செல்வம் கைக்கே வராமல்/
துன்பம் கொண்டே இளைத்தான்.

**நஸீரா எஸ் ஆப்தீன்**
**ஓட்டமாவடி**
**இலங்கை.**

## தாய்மையில் மேன்மை

பெண்மையில் உண்மை
காண்பது வெண்மை

இளமையின் தூய்மை
வாழ்க்கையில் ஏழ்மை

வார்த்தையில் வீழ்மை
வாழும் நாட்களோ இயலாமை

தாய்மையில் கண்டதோ மேன்மை
தரணியில் அவள் மேல் பார்வையோ கூர்மை

வாழ விடாது இந்தப் பொறாமை
துடித்தது அவள் முயலாமை

சுதந்திரமாய்ப் பறப்பதற்கு வழியின்மை
பாரில் அவளுக்கென்றே தனிமை

பாரதி எழுதிய புதுமை
அவளும் ஒரு பதுமை

ஓடியோடி ஒளியும் கொடுமை
ஓழிந்திடுமோ இத்தகமை

எழுந்திடு பெண்மை
என்ற குரல் வரும் திண்மை
காத்திருக்கும் இப்பெண்மை

**வஸீலா ஸாஹிர்**
**நீர்கொழும்பு**

## அடுத்தது நானாக வேண்டும்

கொடி பிடித்து கோஷம் இட்டு
கொள்கை எல்லாம் எடுத்துரைத்து
சம உரிமை சமத்துவம் கோரி
சண்டையிட பிடிக்கவில்லை

சிறிமாவோ, மார்க்ரெட், இந்திரா, சந்திரிக்கா
இவர்கள் போல் ஆட்சியொற்றிய
அடுத்த பெண் நானாக வேண்டும்
அதற்காக உழைப்பது பிடித்திருக்கு

கண்ட கண்ட இடங்களுக்கு
சென்று வர பிடிக்கவில்லை
என்ற விடயத்துக்கு வாதிட்டு
வீண் பொழுதாக்கலிலும் விருப்பமில்லை

கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ்
இவர்கள் போல் அண்டவெளி சுற்றும்
அடுத்த பெண் நானாக வேண்டும்
அதற்காக உழைப்பது பிடித்திருக்கு

அரசியல், அறிவியல், வானியல், இலக்கியம்
வளர்த்த வரலாற்றுப் பெண்கள் வரிசையில்
அடுத்தது நானாக வேண்டும்
அதற்காக இனி உழைப்பது பிடித்திருக்கு

**றஷீதா ஏ நாபித்**
**சாய்ந்தமருது**
**சிறிலங்கா பெண் கிளப்**

## விடுதலை

ரைஸா ஜன்னலைத் திறந்தாள். இளங்காலைச் சூரியன் ஓலையின் இடுக்குகளால் எட்டிப்பார்த்து நடனமாடியது. வாசலில் மாறி மாறி காட்சியளித்த வர்ண ஜாலம் கண்ணைப் பறித்தது. கீச்சிட்டுப் பறந்த குருவிகளின் இன்னிசையில் அவள் கிறங்கினாள்.

தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு தாடியை தடவியவாறு நடந்து வரும் தனது தந்தையை தூரத்தில் கண்ட ரைஸா பெரு மூச்சு விட்டாள். ரைஸாவுக்கு 29 வயது. இப்போது தான் அவளுக்கு திருமணம் கை கூடியிருந்தது. அவளுக்கு பின்னால் இன்னும் மூன்று தங்கைமார் இருந்தனர். அதிகாலையில் சுப்ஹ் தொழுதுவிட்டு மாப்பிள்ளை வீட்டார் அழைத்தார்கள் என்று சென்ற தந்தை இப்போது தான் வீட்டுக்கு வருகிறார். என்ன சொன்னார்களோ என்று ரைஸாவின் நெஞ்சு படபடத்தது.

ரைஸாவின் தந்தை ரமீஷ் சாய்வு நாற்காலியில் பெருமூச்சுடன் சாய்ந்தார். ‘‘என்னங்க அவங்க என்ன சொன்னாங்க’’ ரைசாவின் தாயார் பாத்திமாவுக்கு பொறுமை இருக்கவில்லை, கதவோரத்தில் மகளின் நிழலைக் கண்ட ரமீஷ் தனது மனைவிக்கு கண்ணால் ஜாடை காட்டினார். ‘‘ஒன்றுமில்லை பாத்திமா கல்யாண ஏற்பாடுகள் எப்படி நடக்குது என்று விசாரிக்கத்தான் கூப்பிட்டு இருக்காங்க’’ வாய்க்கு வந்ததை சொன்னார். ரமீஷ் கையில் நீரோடு வந்தாள் ரைசா வாப்பா ‘‘அவங்க எல்லோரும் சுகம்தானே’’ எனக் கேட்டாள். தனது மகளின் கன்னங்களில் ரோஜா பூப்பதைக் கண்ட ரமீஷ் கண்கலங்கினார். தலையைக் குனிந்து கொண்டார். ‘‘ஓம் மகள் மாப்பிள்ளையையும் பார்த்துட்டுத் தான் வாறன் உங்களைப் பற்றி விசாரிச்சாங்க’’ தனது தந்தை சொன்னதைக் கேட்ட ரைஸாவின் கன்னங்கள் சிவந்தன வெட்கச்சிரிப்புடன் உள்ளே ஓடினாள், அவள்.

˙ சிறிது நேரத்தில் வெளியே வந்த ரைஸா ‘‘உம்மா உடுப்புத் தச்ச அளவு எடுக்கணும் என்று மாமி வரச் சொன்னா நான் போயிட்டு வந்திரவா’’˙ எனக் கேட்டாள். ‘‘ சரி மகள் தங்கச்சிய கூட்டிக்கொண்டு போங்க’’ பக்கத்தில் இருக்கும் மாமி வீட்டுக்கு மகளை அனுப்பிய பாத்திமா தனது கணவரின் அருகில் கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்தாள். ஏதோ ஒரு குண்டு இருக்கிறது என்று அவளுக்கு புரிந்தது. ‘‘அவங்க என்ன சொன்னாங்க’’ பாத்திமா ஆவலுடன் தனது கணவனிடம் கேட்டாள்.

‘‘ மாப்பிள்ளைக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கி தரட்டாம்’’ கணவன் சொன்னதை கேட்டு நெஞ்சில் கை வைத்தாள் பாத்திமா. ‘‘அல்லாஹ் அப்படியா சொன்னாங்க நாங்க ஐந்து பவுண் நகை செய்து வைத்திருந்தோம் அவங்க 10 பவுண் போடச் சொன்னாங்க அதுக்கே நாங்க என்னங்க இவ்வளவு கஷ்டப்பட்டும் இன்னும் 4, 5 லட்சத்துக்கு எங்கே போறது’’ பாத்திமாவின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. ‘‘ நீங்க ஆம் என்று சொல்லிட்டீங்களா?’’ ‘‘ பாத்திமா மகளுக்கு வயசு ஆகுது இன்னும் பின்னால மூன்று குமர்கள் இருக்கு இது விரும்பிக் கேட்டு வந்த விஷயம் மகள்ட அழகில் அவங்களுக்கு நல்ல விருப்பம். மாப்பிளட உம்மாக்கு விருப்பம் இல்லாட்டியும் மாப்பிள்ளை ஒத்தகாலில நிக்காரு அவருக்கு இது ஒன்றும் தெரியா என்று நினைக்கிறேன் அவர்கிட்ட சொல்ல இயலுமா மகள்ட சந்தோசத்தை கெடுக்க இயலுமா? சரி இப்ப சல்லிக்கு என்ன செய்வது’’? இருவரும் மிகுந்த யோசனையுடன் அன்று இருந்தனர்.

மாலை 3 மணி தனது கட கட சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியேறினார். ரமீஷ் பாடசாலை மைதானத்தில் பெரிய மேடை அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாதை முழுக்க மக்கள் நிறைந்திருந்தனர். சைக்கிளில் செல்ல முடியாததால் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு வேடிக்கை பார்த்தார். பக்கத்தில் இருந்தவரிடம் விசாரித்தார். ‘‘ரமீஷ் மார்ச்-8 மகளிர் தினம்தானே˙ அதுதான் மகளிர் மன்றக் கூட்டம் நடக்குது. விழாவுக்கு நமது பிரதம மந்திரியின் வைபும் வாரதாம். அவருடைய வருகைக்காக தான் எல்லோரும் காத்திருக்காங்க.’’ தனது நண்பர் கூறியதைக் கேட்டு வியந்தார் ரமீஷ். மேடைகள் பெண்கள் கனல் தெறிக்கப் பேசிக்கொண்டிருந்தனர்.

"அடுத்ததாக நமது மகளிர் மன்ற தலைவி உரை நிகழ்த்துவார்" என்ற அறிவிப்பைத் தொடர்ந்து மேடையில் ஏறிய பெண்ணைக் கண்டு ரமீஷ் திடுக்கிட்டார். " அட இது மாப்பிள்ளையின் உம்மா அல்லவா" அவரது கம்பீரமான குரல் ஒலி வாங்கியில் ஒலித்த போதும் எல்லோரும் கைதட்டினர். "பெண்கள் வீட்டின் கண்கள் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் பெண் என்பவள் போற்றுதற்கு உரியவள், அன்புக்கு ஏங்குபவள், பெண்ணை மதிக்கும் பெருமைப்படுத்தும் சமுதாயம் மாறவேண்டும். பெண்ணை விரட்டும் சீதனப் பேய் முதலில் ஒழிக்கப்பட வேண்டும் அதற்கு ஆண்களை பெற்ற ஒவ்வொரு பெண்ணும் உறுதி எடுக்க வேண்டும். முதலில் சீர்திருத்தம் எமது வீட்டில் இருந்து வரவேண்டும். அதுதான் எனது மகனுக்கு நான் ஒரு ஏழைக் குடும்பத்திலிருந்து பெண் எடுக்கிறேன் அது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்." அப்போது கரகோசம் வானைப் பிளந்தது.

ரமீஷ் மெதுவாக எழும்பினார். தனது மனைவியின் கடைசி சொத்தான வளையல்கள் இரண்டும் சட்டைப்பையில் பத்திரமாக இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக்கொண்டார். தனது கடகட சைக்கிளை அடகு கடையை நோக்கிச் செலுத்தினார்.

சீர்கெட்ட சீதனத்தை

சீற்றமுடன் சாடுவோம்

சீர்திருத்தம் நம் வீட்டில்

சீர்மையுடன் போடுவோம்

கணீரென்ற குரலில் கவிதை காற்றில் கரைந்தது.

**ஹஸனியா இர்பான்**

**தர்காநகர்**

**புதியவள்**

அரிச்சுவடியின் முதல் வரியே!

ஆண்டவனின் ஆலயமே!

இன்பத்தின் இருப்பிடமே!

ஈடிணையற்ற ஈடேற்றமே!

உயிரினத்தின் உயர்பிறப்பே!

ஊதியம் பாரா ஊழியத்தாயே!

எண் எழில் திசைக்கும் வடிவே!

ஏற்றமிகு ஏணிப்படியே!

ஐம்பூதங்களும் பணியும் ஐஸ்வரியமே!

ஒப்புவமையில்லா ஒருத்தியே!

ஓடாய்த் தேயும் ஓவியமே!

ஔடதமாகும் ஔவை நீயே!

இ∴தே உந்தன் இதிகாசமே

**ரஜூலா பேகம் உவைஸ்**
**நீர்கொழும்பு**

## PEN CLUB தந்த களம்

பென் கிளப் அகில இலங்கை கவிதாயினிகளின் ஒருமித்த பங்களிப்பாக பெண்கள் மட்டுமே என மட்டுப்படுத்தப்பட்ட பென் கிளப் தனது திறமையால் ஏனைய நாட்டு பெண் எழுத்தாளரர்களையும் ஈர்த்துள்ளமை விசேடமாகும். அதேவேளை மூத்த எழுத்தாளர்களும் இணைந்து சிறப்பிக்கும் குடும்பமாகவும் இருக்கிறது. நிர்வாகக் குழுவில் தற்போது 20 பேர் உள்ளனர். தலைமையினால் வழங்கப்பட்ட தலைப்புகளுக்கு ஏற்ப வாரத்தில் ஏழு நாட்களும் ஏனைய எழுத்தாளர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் செயல்பட்டு வருகின்றனர்.

பென் கிளப் ஆனது சுமார் 160க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது வாட்ஸ்அப் மூலம் நடத்தி வரும் பென் கிளப் ஆனது 2020.03 20 மஸூறா சுஹூறுத்தீன் ஆசிரியையினால் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம்கள் பெண் எழுத்தாளர்கள் அறுபத்தி மூன்று பேரின் கவிதைகளை சுட்டுவிரல் எனும் தொகுதியாக பென் கிளப் வெளியிட்டது. சமூகத்தில் காணப்படும் இடர்பாடுகளையும் துணிச்சலாக எதிர் கொண்டு சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி அமைக்கும் களமாக தற்போது வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

மேலும் இலை மறைகாயாக இருக்கும் எழுத்தாளர்கள் முன்வரும் பட்சத்தில் அவர்கள் பற்றிய திறமைகளை களம் தேடிக் கொடுப்பதில் மிகவும் ஆர்வத்துடன் செயல்படும் தலைவி அவர்களின் பொறுப்புணர்வு வரவேற்கத்தக்கது. இந்த ஸ்ரீலங்கா பென் கிளப் மூலம் நானும் களம் பெற்று பிரகாசித்தமை என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

**பொதுச்செயலாளர்**

**AB.ஜெஸீமா முஜீப்**

**Slpc**

## பெண்மை போற்றுவோம்

மாதர்களை இழிவு செய்யும்
மடமையினைக் கொளுத்தி
குவலயத்தில் முதலிடத்தை
முண்டாசுக் கவிஞன்
முழங்குவதற்கு முன்னரே
பெண்ணுரிமை பேசிய எம்
பெருமானார் மொழிக்கொப்ப
அருமையோடு இப்புவியில்
ஆளுமையோ டாழுகின்ற கண்மணிகள் எம் பெண்மணிகள்.

பெண்மை யென்றொதுக்கி
வீணே புறந்தள்ளியோர்
உண்மை நிலையறிந்தார்
உலகாளும் பெண் தகைமை
கண்ணூடாய்க் கண்டிவர்கள்
கனிந்து மனம் வாழ்த்துகின்றார்.

ஆண் பிள்ளைகளை விட
ஆற்றலிலே முன் நின்றார்
பாரதியின் புதுமைப் பெண்
பாட்டளவில் நிற்கவில்லை
பார் முழுதும் இன்றவர்கள்
பல் துறையில் சாதிக்கின்றார்

தடுத்தெது தடை வந்தாலும்
தாண்டிடும் தைரியத்தை
கொடுத்திடும் ஆணும் பெண்ணால்
குவலயம் ஆழ்வதுண்மை

**திருமதி. சுஹைறதா ஏ கரீம்**
**மூதூர் 01**

## இதய ஊற்றிலிருந்து

மானிடப் பிறவியென்பது ஒரு வகையில் வரம் தான். எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதை விட அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைத் தான் வரலாறு கவனத்தில் எடுக்கும். அப்படி வாழ்ந்த வாழ்க்கையில் அடுத்தவனுக்கு ஒரு படிப்பினை இருந்தால் வாழ்ந்தவர்களின் வாழ்க்கை எல்லோராலும் போற்றப்படும். அந்த வகையில் சிறி லங்கா பென் கிளப் ஆனது இவ்வளவு விரைவில் இந்த மாதிரியாக கிளை விட்டு மணம் பரப்பும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.எங்கள் குழுமத்திலுள்ள பெண் ஆளுமைகளைப் பற்றி அவர்கள் ஒவ்வொருவரினதும் தனித்தன்மைகள் பற்றிக் கூறுவதென்றால் இச் சஞ்சிகை அதற்குப் போதாது.

எமது நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் படிப்பினையூட்டும் சிந்தனையோடு ஆரம்பமாகி திங்கள் தொடக்கம் ஞாயிறு வரை பலவித தலைப்புகளின் கோர்வையாக சங்கமிக்கின்றன.ஆரம்பித்து ஒரு வருடமும் பூரத்தியாகி விட்டது. ஆனால் பல வருடங்கள் பழகிய நட்புக்களின் பூஞ்சோலையாக மிளிர்கின்றது. இன்பமோ, துன்பமோ எல்லோருடனும் பகிர்ந்து கொள்வதில் தங்கள் மனதை இலேசாக்கிக் கொள்கின்றனர்.இக் கொஞ்ச காலத்தினுள்ளே சுட்டு விரல் கவிதைத் தொகுதி நூலினை வெளியிட்டு எல்லோரினதும் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

எங்களது சிறிலங்கா பென் கிளப் மணம் வீசும் நந்தவனமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதில் நான் உறுப்பினராக இருப்பதில் பேருவகையடைகின்றேன்.

**திருமதி: மர்ளியா சக்காப்**

**திருகோணமலை.**

## பெண்ணின் ஊனம் எங்கே!

ஒற்றைக் காலும் மற்றக் கையும்
கொஞ்சம் கோணல் தான்
வீரம் என்னை சோரம் போக விடவில்லை

உற்ற துணையும்
ஊரவர் பேச்சும் குத்தல்த் தான்
மற்றக் கையின் வலிமை என்னை
மாய்த்து விடவில்லை

அலைகளுக்குள் நான் அடிபட்டுச்
சிதைவுறும் போதெல்லாம்
கொட்டும் உங்கள் ஆனந்தக்
கண்ணீரை இனியேனும்
துடைத்துக் கொள்ளுங்கள்
அலைகள் தாக்கும் போதெல்லாம்
என் ஆளுமைகளுக்குள் மூழ்கி
முத்தெடுத்துக் கொண்டிருந்தேன்.

தூற்றிக் கொண்டும்
தூவிக் கொண்டுமிருக்கும் உலகத்தில்
நான் மேவிக் கொண்டிருக்கின்றேன்
சாதனைக்
கால்களைப் புதைத்துப் புதைத்து
வேர்களோடச் செய்கின்றேன்.

பள்ளத்தில் கொட்டிய நுரைகளாய்
என் முயற்சிகள் இராது
மலையில் நட்டிய மரமாய்ப்
படர்ந்து கொண்டிருக்கும்.

என் ஒடிந்த கைகளாலும்
கை கொடுக்க இயலும்
வளைந்த கால்களாலும்
வான் உயர முடியும்
வீரத்தையும் வலிமையையும்
விதைக்க விதைக்க
சிதையுது என் இயலாமை

பன்னீர்க்குடம் உடைந்தே அழாத நான்
கண்ணீர்க் குடம் உடைத்துக் கதறுவதா
வீரத்தை உறிஞ்சி
கைகளுக்கும் கால்களுக்கும்
கலசம் பூட்டிக் கொள்கின்றேன்
என் கனவுகளை வெல்கின்றேன்.

**பர்ஸானா எம் .பி**
**நிந்தவூர்.**

## பெண்கல்வி

பேரிடர் களைந்திடப்
பாரினில் விதைப்போம்
பல்துறைச் சாதனை
படைத்திடும் பெண்கல்வி

பெண்ணின் கல்வியால்
பெருகிவருகிறது முன்னேற்றம்
பேதமை ஒழிந்து
வளர்கிறது பாலின சமத்துவம்

இயல்பிலே இனியவராம்
துணிவிலே தளராதவராம்
உலகத்தில் உயிர்களைச்
சிருஷ்டிக்கும் பெண்டிர்

குடும்பத்தின் குத்துவிளக்கு
குதூகலத்தின் மொத்தக்கணக்கு
போடுவாள் கிழிந்தவைக்குத் தையல்
அவளே குற்றமில்லாத் தையல்

சார்ந்தவருக்குதவியே
சந்ததியை வளர்க்கின்றது
சமூகச் சமர்ப்பணமாகிறது
பெண் கற்கும் கல்வி

நானிலம் போற்றிட
நல்லுறவுகளாய் மிளிர்கிறாய்
நீடுழி வாழ்கவே
நம் நங்கையர் திலகங்கள்

**Dr ஜலீலா முஸம்மில்**

**ஏறாவூர்**